வேளாண்மை என்பது ஒரு முக்கியமான முதனிலைத் தொழில் ஆகும். இந்த தொழில் மனிதன் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருள்களைச் சேகரித்துப் பயன்படுத்திக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்த இயற்கையோடு ஒன்றிணைந்து பணியாற்றி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்கிறான். வீட்டு விலங்குகள் மற்றும் தாவாரங்களின் (பயிர்கள்) உற்பத்தியைக் கொண்டு நாகரிகங்களுக்கு வழிவகுத்திட்ட சிறப்பான மானிடவியல் வளர்ச்சி வேளாண்மையாகும்.

உணவுப் பெருக்கத்தை உருவாக்கிக் கொள்வது அடர்த்தியான மக்கள் தொகை மற்றும் நிலத்தொடர்புச் சமுகங்களை வெட்டுதல் மற்றும் பல்வேறு வகையிலான நீர்பாசனங்கள் மூலம் பயிர் வளர்ப்பிற்கு ஏற்றாற்போல் நிலத்தின் ஏற்புத்திறனை நீட்டிப்பது உள்ளிட்ட பல்வேறு விதமான சிறப்புக்கூறுகளுடன் கூடிய உத்திகளோடு விவசாயம் (வேளாண்மை) தொடர்பு கொண்டிருக்கிறது.

தோட்டப்பயிர்கள் புடலை, தக்காளி, கீரை வகைகள், காளான், அவரை, கொத்தவரைக்காய், கத்திரிக்காய், பாகற்காய், கொத்தமல்லி போன்ற பயிர்கள் விளைகின்றன.

**வேளாண்மைக்கு தகுந்த உரங்கள்**

மக்கள் பயிர்கள் செழுமையாக வளர நிலத்திற்கு சத்து பொருட்களை சேர்க்கின்றனர். சேர்க்கின்ற பொருளுக்கு பெயர்தான் உரம் என்று குறிப்பிடுகின்றனர். மக்கள் உரங்களை இரண்டாக வகைப்படுத்தி உள்ளனர். ஒன்று இயற்கை உரங்கள் என்றும் மற்றொன்று செயற்கை உரங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இயற்கை உரங்கள் என்பது மாட்டுச்சாணம், மாட்டுக் கோமியம், ஆட்டு எரு, மண்புழு உரங்கள், தழைச்சத்து, பண்ணையில் இருந்து வரும் தேவையில்லாத கழிவுகள், அன்றாடம் பெருக்கும் குப்பைகள் போன்றவற்றை குறிப்பது ஆகும். இந்த உரங்களை நிலத்திற்கு பயன்படுத்துவதால் நிலத்தின் தன்மை மாறாமல் இருக்கும். மனிதர்களுக்கும் எந்தவித பாதிப்பும் இருக்காது.

செயற்கை உரங்களாக உரம், யூரியா, பூச்சி மருந்து, ஜிப்சம், அமைடு உரங்கள் போன்றவைக் குறிக்கும். இந்த உரங்களையே இன்றைய சூழலில் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். பயிர்களுக்கு நல்ல விளைச்சலை தருவதாக இருந்தாலும் மக்களுக்கு பாதிப்பைத்தான் ஏற்படுத்துகின்றன. செயற்கை உரத்தினால் விளையும் பயிர்களின் உணவுகள் நச்சு பொருட்கள் கலந்தவையாக காணப்படுகின்றன. இதனால் மக்களுக்கு சிறிது சிறிதாகத்தான் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று ஆய்வுகளில் கூறியுள்ளனர்.

**முடிவுரை**

வேளாண்மை மக்களின் முக்கியமான அங்கமாகும். வேளாண்மை எந்த இடத்திற்கு தகுந்தது, எந்த கருவிகள், எந்த பொருள்கள் பயன்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பயிர் வளர்ச்சிக்கு எவை உதவுகிறது என்பதை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதை பற்றி நாமும் அறிந்து பகுதி நேரமாக வேளாண்மையை செய்வது நமது கடமையாகும். இது நமது தலைமுறைக்கு எடுத்து கூறி இதன் பயனை குறிப்பிட வேண்டும்.

**மேற்கோள் நூல்கள்:**

1. வேளாண் கலைச்சொற்களின்
   அமைப்பும் சொற் பொருண்மையும் ஆசிரியர். த. இளஞ்செழியன்
2. தொழிற் கருவிகள்
   ஒரு மொழியல்நோக்கு - முனைவர். சுலி.சுந்தரபாலு
3. இணையதளம்:
   (i) ta.m. wikipetia. Org (ii) ssivf. Com
   (iii) dailythanthi.com (iv) tnan.ac.in



**22**

**இரா. மணிகண்டன்**
முனைவர் பட்டஆய்வாளர் (தமிழ்),
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
புதுச்சேரி – 605008.

## திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறள் நம் வாழ்வியல் உண்மையை உணர்த்தும் வாழ்க்கை இலக்கியமாகும். அங்ஙனம் திருக்குறள் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் சூழலிலும் ஏற்படும் அடிப்படையான சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அன்புநெறி**

இவ்வுலகில் பிறந்த அனைத்து உயிர்களிடத்து அன்பு என்பது தேவையே. அன்பில்லா இடத்திலேயே பல்வேறு வகையான தீமைகளும் துன்பமும் தோன்றுகின்றன. அன்பு என்பது இவ்வுலகில் உள்ள அனைத்தையும் இணைக்கும் பண்பினைக் கொண்டதாகும். அன்பினால் எதையும் வெற்றி கொள்ள இயலும். அன்பு என்ற ஒன்றே வாழ்வில் தோன்றும் அனைத்து இன்பத்திற்கும் ஆதாரமாக இருந்து நம் வாழ்வினைச் செம்மையுறச் செய்கிறது. இவ்வுலகில் உயிரானது உடம்போடு கூடி வாழ்தல் என்பது உயிர்கள் அனைத்தும் அன்போடு கூடி வாழ்வதற்கே இத்தகைய உண்மையை உயிர்வாழ்க்கை என்கிறார் வள்ளுவர். இதனை,

> **அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு. (குறள். 80)**

என்ற குறளில் அன்பின் வழியாகவே உடம்பில் உள்ள உயிர்க்குச் சிறப்பாகும் என்கிறார். மேலும் அவ்வன்பு இல்லாதவர் உடம்போ வெற்று எலும்புக் கூட்டின்மேல் தோல் போர்த்தியது போன்றதாகும் என்று உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். இதனால் எல்லா வகையிலும் வேறுபட்ட இரண்டும் இணைந்து வாழ்வதே வாழ்வாகும். அவற்றுள் ஒன்று நீங்கின் வாழ்வு இல்லை என்பதை அன்பின் நெறியாகச் சுட்டுகிறார். வள்ளுவர் அரிய உயிரால் உடல் சிறப்படைவதும் உடலால் உயிர் சிறப்படைவதும் போல அன்பால் வாழ்க்கையும் வாழ்க்கையால் அன்பும் வெளிப்பட்டு சிறப்படைய வேண்டும் என்பது வள்ளுவரின் நெறியாகும். இங்கு அன்பை வெளிப்படுத்தி விருப்பத்தோடு வாழும் வாழ்க்கையே உலகில் இன்பம் தழைக்க வழியாகும் என்கிறார். கொடிய பாலை நிலத்தில் காய்ந்து

பயிரிடக்கூடிய நிலத்தில் பயிர்களை சாகுபடி செய்தல் மற்றும் கால்நடைகளை வளர்த்தல், மேய்ச்சல் நிலம் அல்லது தரிசுநிலம் கால்நடைகளை மேய்த்தல் ஆகியவை வேளாண்மையில் அடித்தளமாக விளங்குகின்றன.

### வேளாண்மைக்கு தகுந்த இடங்கள்

பழந்தமிழர்கள் பயிர்வகைகளையும், நிலத்தையும் இரு பிரிவுகளாக பிரித்து வைத்துள்ளனர். ஆவை இன்றளவும் வழக்கத்தில் உள்ளன. 1. நன்செய் நிலம், 2. புன்செய் நிலம் ஆகும். பொதுவாக நீர்ப்பகுதி அதிகம் நிறைந்துள்ள இடத்திற்கு நன்செய்நிலம் என்றும் நீர் தேக்கம் குறைந்து, இயற்கை மழையால் வளரும் பயிர்கள் உள்ள இடத்திற்கு புன்செய் நிலம் என்றும் கூறுகின்றனர். புன்செய் நிலத்தில் பயிரிடப்படும் பயிர்களை மானாவரி பயிர் என்று மற்றொரு பெயரைக் குறிப்பிடுகின்றனர் மக்கள்.

நன்செய் நிலம் என்றால் அங்கு ஏரி, குலம், ஆறு போன்ற இடங்கள் காணப்படும். இந்த இடங்களில் இருந்து நீர் எப்போதும் பயிர்களுக்கு கிடைகின்றன. இதனால் இந்நிலத்தில் பயிர்கள் வளம் குன்றாமல் செழிப்பாக வளர்கின்றன. இந்நிலத்தில் கரும்பு, வாழை, வெற்றிலை, நெல் போன்ற பயிர்கள் வளர்கின்றன.

மழையின் எதிர்பார்ப்பில் வளரும் பயிரைத்தான் புன்செய் நிலம் என்று குறிக்கின்றனர். இந்த இடத்தை "வானம் பார்த்த பூமி என்றும் கூறுவர். இந்நிலத்தில் தானியங்கள், பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்கள் வளர்கின்றன.

### வேளாண்மைக்கு பயன்படும் கருவிகள்

வேளாண்மைக்கு உதவியாக இருக்கின்ற கருவிகலைத்தாம் வேளாண்மைக் கருவிகள் என்று குறிப்பிடுகின்றிறாம். அந்த வகையில் வேளாண்மைக்கு தருந்தார் போல் பல கருவிகள் பயன்பட்டு வருகின்றன. ஓவ்வொரு பயிர்களுக்க ஏற்ற வகையில் கருவிகள் அமைந்துள்ளன. முதலில் அடிப்படையாக அமைந்த கருவிகள் இரண்டுதான் ஒன்று கலப்பை மற்றொன்று மண்வெட்டி ஆகும். இவை இரண்டுமே வேளாண்மைக்கு அடிப்படை கருவிகளாக அமைகின்றன.

கலப்பை மண்ணை மிருதுவாக வைக்கவும், களைகள் அதிகமாக வளர்வதை தடுக்கவும் பயன்படுகின்றன. மண்வெட்டியானது நிலத்தில் உள்ள மண்ணை வெட்டி எடுக்கப் பயன்படுகிறது. எந்த ஒரு பயிர்கள் நிலத்தில் வளர்வதற்கும், விதைகள் விதைப்பதற்கும் முன்பே பயன்படுகிறது.

கலப்பைக்கு ஈடாக இன்று செயற்கை முறையில் இயந்திரமும் உருவாகிவிட்டது. அதன் பெயர்தான் டிரேக்டர். இந்த இயந்திரம் நிலத்தை உழுவதற்கும், சமப்படுத்துவதற்கும் பயன்படுகின்றன. இதே நிலத்தை சமப்படுத்த பரம்பு, கொடிஞ்சில் என்று குறிப்பிடுகின்றனர் மக்கள். நிலத்தின் தரத்தை அதிகப்படுத்த தேவையான தழைச்சத்தை வெட்டிப்போடுவதற்கு கத்தி பயன்படுகின்றது. சேடையில் உள்ள கட்டிகளை உடைக்க இரும்பால் ஆன பட்டலர் கருவி உதவுகிறது. மேலும் நிலத்தில் விளைந்த நெல், கம்பு, கேழ்வரகு, போன்ற பயிர்களின் அறுக்க உதவும் கருவி அரிவாள். பயிர்களுக்கு இடையில் உள்ள தேவையில்லாத தாவரங்களை (களைகலை) நீக்க கலைக்கொத்தி கருவி உதவுகின்றன.

நிலத்தில் உள்ள உறுதியான மண்ணை குத்தி எடுக்க கடப்பாரையும், பயிர்களுக்கு தேவையான நீரை கொடுக்க உதவும் ஆயில் இஞ்சினும், தானியங்களை அளக்க படியும், மரக்காயும், வேளாண்மைக்கு பெரிதும் பயன்படுகின்றன. இதே போன்று வேளாண்மைக்கு இயற்கையாக கிடைத்த கருவிகளும், செயற்கை முறையில் அமைந்த இயந்திர கருவிகளும் பல காணப்படுகின்றன.

### வேளாண்மையில் பயிர் செய்யும் முறைகள்

நிலத்தில் பயிர் செய்வதற்கு முன்பு நிலத்தை கலப்பை அல்லது டிரேக்டர் இயந்திரத்தினால் இரண்டு அல்லது மூன்று முறை நிலத்தை உழுவ வேண்டும். நிலத்தை இப்படி உழுவதினால் பயிர்கள் விளைவதற்கு ஏற்றால் போல் நிலம் பக்குவப்பட்டு காணப்படும். ஓவ்வொரு பயிர்களையும் இதற்கு பிறகே பயிரிட வேண்டும். நிலத்தில் ஒவ்வொரு பயிர்களுக்கும் பயிரிட ஒவ்வொரு முறைகள் காணப்படுகின்றன.

நிலத்தில் பொதுவாக பயிர்களை மக்கள் மூன்று போகங்களாக பயிரிடுகின்றனர். அதாவது குறிப்பாக ஒரு வருடத்திற்கு மூன்று முறை பயிர் செய்வது என்று அர்த்தம் ஆகும். இந்த மூன்று போகங்களுக்கும் பெயர்களும் கொடுத்துள்ளனர் மக்கள். முதல் போகத்தை சம்பா என்றும் இரண்டாம் போகத்தை சொனப்பாலை என்றும் மூன்றாம் போகத்தை அப்படியே மூன்றாம் போகமென்றெ குறிப்பிடுகின்றனர் மக்கள்.

சம்பா பயிர் ஆடி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை பயர்கள் செய்யப்படுகின்றன. சொனப்பாலை பயிர் மார்கழி மாதம் முதல் சித்திரை மாதம் வரை பயிர்கள் செய்யப்படுகின்றன. இதே போன்று மூன்றாம் போகம் வைகாசி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரை பயிர்கள் செய்யப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு போகமும் ஐந்து மாதத்திற்குல் விளையக்கூடிய பயிர்களாக அமைந்துள்ளன.

நெல், கடலை, கம்பு, கேழ்வரகு, சக்கரவல்லி கிழங்கு போன்ற பயிர்கள் சம்பாவில் பயிரிடப்படும் பயிர்கள் ஆகும். இதே போன்று சொனப்பாலையிலும் மூன்றாம் போகத்திலும் நெல் பயிர் மட்டும்தான் பயிரிடப்படுகின்றன. இந்த மூன்று போகத்தையும் பொதுவாக குறிப்பிடுகின்றனர். இதை தவிர்த்து இன்று தோட்டப் பயிர்களும் விளைகின்றன. மக்கள் இன்று பயன்படுத்துகின்றனர். இந்த



ISBN 978-93-81992-40-1

9 789381 992401

# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# Ethical Values as Revealed in Dravidian Literature

International Conference

Volume-2

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. சி. பரசுராமன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஜான்மனுவேல்

முனைவர் க. ரமேஷ்

முனைவர் இரா. செல்வராஜ்

முனைவர் இரா. பிரபாகரன்

முனைவர் சு. வேணு

முனைவர் ச. சாரதா

முனைவர் பா.அ.முனுசாமி

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>Ethical Values as Revealed in Dravidian Literature (Internationl Conference) |
| பதிப்பாசிரியர்கள் | : | பேரா. **சி.பரசுராமன்**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.<br>பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**<br>பேரா. முனைவர் **க.ரமேஷ்**<br>பேரா. முனைவர் **இரா.செல்வராஜ்**<br>பேரா. முனைவர் **இரா.பிரபாகரன்**<br>பேரா. முனைவர் **சு.வேணு**<br>பேரா. முனைவர் **எஸ்.சாரதா**<br>பேரா. முனைவர் **பா.அ.முனுசாமி** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், |
| விலை | : | ரூ.800/- |
| பக்கங்கள் | : | 707+12 = 719 |
| முதல் பதிப்பு | : | 25-06-2016 ஆனி 11 |
| ஒளியச்சு | : | அமிர்தகனி ஜெகவீரன்,<br>சரவணா கிராபிக்ஸ், வேலூர்.<br>செல்: 98658 20640. |
| கிடைக்குமிடம் | : | ஏலகிரி முத்தமிழ் மன்றம்<br>நிலாவூர், நிலாவூர் அஞ்சல்<br>ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்<br>தமிழ்நாடு-635 853. |
| வெளியீடு, உரிமை | : | **ஏலகிரி முத்தமிழ் மன்றம், ஏலகிரிமலை.** |
| அச்சிட்டோர் | : | டுடே பப்ளிகேஷன், சென்னை. |
| **ISBN** | : | **978-93-81992-40-1** |


# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

## Ethical Values as Revealed in Dravidian Literature

**(Internationl Conference)**


### பதிப்பாசிரியர்கள்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. **சி.பரசுராமன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.

பதிப்பாசிரியர்கள்

பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**
பேரா. முனைவர் **க.ரமேஷ்**
பேரா. முனைவர் **இரா.செல்வராஜ்**
பேரா. முனைவர் **இரா.பிரபாகரன்**
பேரா. முனைவர் **சு.வேணு**
பேரா. முனைவர் **எஸ்.சாரதா**
பேரா. முனைவர் **பா.அ.முனுசாமி**



**ஏலகிரி முத்தமிழ் மன்றம்**
நிலாவூர், நிலாவூர் அஞ்சல்
ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்
தமிழ்நாடு-635 853.

155

முனைவர் ம.செந்தில்குமார்
மு.ரமேஷ்
ஆய்வியல் நிறைஞர்.

# புறநானூறு காட்டும் வாழ்வியல் நெறிகள்

## முன்னுரை

மனித வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக இலக்கியங்கள் திகழ்கின்றன. மனித வாழ்வியலை மேம்படுத்துவது இலக்கியத்தின் முதன்மை நோக்கமாக கருதப்படுகிறது. அக்காலம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை மனிதன் அன்றாட வாழ்வியல் கருத்துக்களை இலக்கியங்கள் வாயிலாக நமக்கு எடுத்தியம்புகின்றன. அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் உள்ள வாழ்வியல் நெறிகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## விருந்தோம்பல்

வீட்டிற்கு வந்த விருந்தினர்களை போற்றுதல் என்பது, மிகத் தொன்மைக் காலம் முதலாகவே தமிழ்ச் சமுதாயத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. பண்டையத் தமிழர்கள் விருந்தோம்பலைத் தன்னுடைய கடமையாகவே கருதினார்கள்.

விருந்தோம்பல் என்பது இல்லம் தேடி வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி உபசரித்துப் போற்றும் உரியப் பண்பாகும். சங்க காலத்தில் விருந்து கணவன் மனைவியரிடையே ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாகவும் விளங்கியுள்ளது. பண்டையத் தமிழர்களிடையே விருந்தோம்பல் பண்பு சிறப்பு பெற்றிருந்தது என்பதனை,

**நெடுநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் புழவாள் வைத்தனன் இன்றுஇக்**
**கடுங்கோட்டுச் சீறியாழ் பனையும் இதுகொண்டு**
**ஈவது இலாளன் என்னாது ஈயும் (புறம். 316)**

**எனும் பாடல் மூலம் அறியலாம்.**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
வேலூர் 632115.



## ஈகை

தமிழர்களுக்குரிய பண்புகளில் மிகச்சிறந்த பண்பாக கருதப்பெறுவது பிறருக்குத் தந்து மகிழும் ஈகைப்பண்பு ஆகும். 'ஈவது விளக்கேல்' என்னும் பொருளுக்கேற்ப ஒருவர் ஈவதை விலக்காது வாழ்வதையே பண்டையத் தமிழர்கள் இன்பமாக கருதினார்கள். பிறருக்கு நிறைவாகக் கொடுத்து அதன் வாயிலாக மனநிறைவு கொண்டு சிறப்புடன் வாழ்ந்தனர்.

தன்னைப் போன்றே பிறரும் சிறப்புடன் வாழவேண்டும் என்று கருதிய மக்கள் பிறருக்குப் பொருளை கொடுத்து ஈகைப்பண்போடு வாழ்ந்தனர். இவ்வின்பத்தையே திருவள்ளுவர்,

**ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொள் தாமுடைமை**
**ஜவத்திழக்கும் வன்க ணவர் (குறள். 228)**

என்று கூறுகிறார்.

மன்னர்கள் தம் நாட்டு வீரர்கள் கவர்ந்து வந்த ஆநிரைகளையும், பொருள்களையும் நாட்டில் உள்ள மக்களுக்கு பாதீடு செய்து ஒற்று ஆராய்ந்து உரைத்தார்க்கும் நிமித்தம் சொன்னவர்க்கும், போர் செய்த வீரர்களுக்கும், தன்னை நாடிவரும் புலவர்களுக்கும் கொடுப்பார்கள். தொல்காப்பியம் இதனை (கொடை) என்று சிறப்பித்து கூறுகிறது. ஈயாமை பண்பு இழிந்தது எனக் குறிப்பிடுவதன் வாயிலாக ஈகைப் பண்பின் சிறப்பைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. இதனை,

**கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும் (தொல்.1036)**

என்றும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகிறது.

புறநானூறு பண்டையத் தமிழரசர்களின் ஈகைச் சிறப்புகளை விவரிக்கும் களஞ்சியமாகத் திகழ்கிறது. மன்னர்கள் தன்னை நாடி வருபவர்களுக்கு பொன் அணிகள், தேர், ஊர், களிறு, நாடு முதலியவற்றை பரிசாக அளித்து மகிழ்ந்துள்ளனர். மன்னர்கள் தன்னைப் புகழ்ந்து பாடி வரும் பரிசிலரை வெறுங்கையோடு அனுப்பாத இயல்பையும், தன்னைப் புகழ்ந்துப் பாடியவர் பின்னும் பிறருடைய புகழைப்பாடி பொருள் வேண்டி இரந்து நிற்க வேண்டிய நிலை ஏற்படாத அளவுக்கு மிகுதியாக செல்வத்தை ஈயும் இயல்பையும் உடையவர்களாகப் பண்டையத் தமிழ் மன்னர்கள் விளங்கியுள்ளனர். இதனை,

**தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்**
**பன்மணிக் குவையொடும் விரைஇக்கொண்ம் எனச்**
**சுரத்திடை நல்கியோனே விடர்சிமை (புறம். 152:2830)**

என்றும்,

**நிற்பாடிய அலங்கு செந்நாம்**
**பிறர் இசை நுவலாமை**
**ஓம்பாது ஈயம் ஆற்றல் எங்கோ (புறம். 22:3133)**

என்னும் பாடல்கள் வழி அறியலாம்.

## விழாக்கள்

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும், மகிழ்ச்சியும், புத்துணர்வையும் ஊட்டுவன விழாக்களே. மனித இனத்தை ஒன்றுபடுத்ததி மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதே விழாக்களின்

செயல்பாடாகும். விழாக்கள் என்பன மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச்சடங்கிலிருந்து தோன்றியதாகவே காட்சி தருகின்றன.

விழாக்களின் வழி ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை அறிய முடிகிறது. பண்டையத் தமிழர்கள் நன்னாளில் விழாக்கள் கொண்டாடுவதை பழக்கமாக கொண்டிருந்தனர் என்பதை,

**முந்நீர் விழவின் நெடியோன் (புறம். 9:10)**
**செல்வம் அல்லேம் கல்லென்**
**விழவுடை ஆங்கள் வேற்றுப்புலத்து இறுத்துக் (புறம். 31:1112)**

எனும் பாடல்வழி அறியலாம்.

### கருவுற்ற மகளிர் மண் உண்ணுதல்

பண்டைய காலத்தில் மணமான மகளிர் கருவுற்றிருந்த காலங்களில் மண்ணை விரும்பி உண்டனர் என்பதை,

**வயவறு மகளிர் அல்லது (புறம். 20:14)**

எனும் பாடல் வழி அறியலாம்.

### கைம்மை முறை

பண்டையக் காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியர் தங்களின் கூந்தலை மழித்தும், வளையல் உள்ளிட்ட அணிகலன்கள் அணிவதை விடுத்தும் புல்லரிசியால் ஆன உணவை உண்டும் படுக்கை விரிப்பில்லாமல் வெறும் தரையில் படுத்து உறங்கியும் கைம்மை முறையை மேற்கொண்டனர். கணவன் இறந்த பின்னர் கடுந்துயரெய்தி மனைவி மேற்கொள்ளும் வாழ்க்கை 'கைம்மை வாழ்வு' எனப்பட்டது. சங்கப் பாடல்களில் காணப்படும் கைம்மைப் பற்றிய செயல்கள் அக்கால மகளிர் இறந்த நிலையில் உயவு, உறைவு ஒப்பனை போன்றவற்றைத் தாமே விரும்பி அமைத்துக் கொண்ட கட்டுப்பாடுகளாகவே உள்ளன. இதனை,

**ஒண்நுதல் மகளிர் கைம்மை கூற**
**அவிர் அறள் அம்மென்**
**கவைஇரும் கூந்தல் கொய்தல் கண்டே (புறம். 25: 1114)**

என்றும்,

**கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி**
**அல்லி உணவின் மனைவியொடு இனியே (புறம். 250: 45)**

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

### இறந்தவர்க்குப் படைத்தல்

கணவன் இறந்த நாளில் மனைவி தனது வீட்டில் சிறிய இடத்தை மெழுகிச் சுத்தம் செய்து, புற்களைப் பரப்பி அதன் மீது பிண்டச்சோற்றை வைத்துப் படைப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனால் பண்டையத் தமிழர்கள் இறந்தவர்களுக்குப் படைக்கும் சடங்கை மேற்கொண்டனர் என்பது புலனாகிறது. இதனை,

**புடிஅடி அன்ன சிறுவழி**
**தன்அமர் காதலி புல்மேல் வைத்த**
**இன்சிறு பிண்டம் யாங்கு உண் டனள்கொல் (புறம். 234: 23)**

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது. இவ்வழக்கம் இன்றளவும் அவர்களை எரிப்பதற்கு முன்னரோ அல்லது தாழியில் புதைப்பதற்கு முன்னரோ சடங்குகள் செய்யும் பழக்கம் பண்டையத் தமிழர்களிடம் இருந்தது என்பதை,

**வெள்ளில் நிறுதத் பின்றைக் கள்ளொடு**
**பல்லகத்து இட்ட சில்லவிழ் வல்சி**
**புலையன் ஏவப் புல்மேல் அமர்ந்தண்டு (புறம். 361:1719)**

என்னும் பாடல் வழி அறியலாம்.

### பண்டமாற்று முறை

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, பால், தயிர், மீன் முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டனர். பரதவர் மீனைக் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லைப் பெற்ற செய்தி புறநானூற்றில் காணப்படுகிறது. இதனால் பண்டையத் தமிழர்கள் பண்டமாற்று முறையை மேற்கொண்டனர் என்பதை,

**மீன் தொடுத்து நெல்குவை.**
**மிசையம்பின் மனை மறுக்குந்து (புறம். 433: 12)**

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

### நீர்வார்த்துக் கொடுத்தல்

பண்டையத் தமிழ் அரசர்கள் அந்தணர்களுக்கு அணிகலன்களையும், பொற்காசுகளையும் தானமாக அளிக்கும் போது நீர் வார்த்து கொடுப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை,

**கேள்வி முற்றி வேள்வி அந்தணர்க்கு**
**அருங்கல நீரொடு சிதறிப் பெருந்தகை (புறம். 361:45)**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

### முடிவுரை

மனித வாழ்வியலை எடுத்துக்காட்டும் இலக்கியங்களுள் ஒன்றாக புறநானூறு திகழ்கின்றன. அக்கால மனிதர்கள் விருந்தோம்பல் பண்பு, ஈகைப்பண்புடன் வாழ்ந்துள்ளனர். கருவுற்ற மகளிர் மண் உண்ணுதலும், பல்வேறு விழாக்களை நடத்தியும், கைம்மை. முறைமை மேற்கொண்டும், இறந்தவர்களுக்கு படைத்தலும் காணமுடிகிறது. அக்கால மக்கள் பண்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.



ISBN 978-93-81992-40-1

# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# Ethical Values as Revealed in Dravidian Literature

International Conference

Volume-1

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. சி. பரசுராமன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஜான்மனுவேல்

முனைவர் க. ரமேஷ்

முனைவர் இரா. செல்வராஜ்

முனைவர் இரா. பிரபாகரன்

முனைவர் சு. வேணு

முனைவர் ச. சாரதா

முனைவர் பா.அ.முனுசாமி

## FOREWORD BY PUBLISHER'S

**Prof. C.Parasuraman,**
Convener & President,
Elagiri Muththamil Manram
Asst. Prof. in Tamil. GTM College, Gudiyattam, Vellore Dist.

The eminence and excellence, the historicity and nobility, the heritage and culture of Dravidian lands are now-a-days being neglected, by students and by some Persons of letters. To bring forth those greatness. I and my friends have set up a society called "Elagiri Muththamil Manram". It has to devote to conduct conferences, seminars, public meetings, lectures and debates. Further books of value and research are to be published. As a first step to achieve these objects, an International conference is convened at Yelagiri hills on the theme "Ethical values as revealed in Dravidian Literature". In Collaboration with Sri Venkateswara University Tamil Department, Tirupati. In the Conference great Scholars and Professors have participated and submitted their deeply researched essays. An anthology of these are made into two edited volumes that adorns your hands. I hope it will serve its purpose.

I implore all men of letters to extend their further support, So that I may follow suit.

I extend my heart-felt thanks to all research scholars and men of learning who have submitted their articles. The head of the departments of college and universities who have advised and guided me, are thanked. All those who worked for the success of the conference are thanked. I am more thankful to Jegaveeran pandian who designed and brought out two published volumes in a fine typeset, I thank with gratitude ie. E.Rathinavelu, K. Subramanian IKS, Dr. Prabhakaran, Dr. S. Venu, Dr. P.A. Munasamy, who have guided me and helped me for the grand success of Conference and sessions of discussion that followed.

Men of name and fame belonging to Elagiri Hills, who stood by my side and helped for the success of all the events, are, thanked. The Philanthropist who have helped monetarily are also thanked.

**Prof. C.Parasuraman,**
Convener

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்வியல் நெறிகள் கட்டமைப்பில் யாக்கை நிலையாமை<br>முனைவர் கி.சங்கரநாராயணன் | 01 |
| 2. | சிலப்பதிகாரத்தில் கண்ணகி தெய்வநிலையடைதல்<br>அ.முத்துகிருஷ்ணன் | 05 |
| 3. | திராவிட மொழிகளின் ஒப்பியல்புகள்<br>முனைவர் செ.பற்குணன் | 11 |
| 4. | முத்தமிழ்க் காப்பியத்தில் பன்முகச் சமயம்<br>சி.தேவிகா. | 16 |
| 5. | தேம்பாவணியில் கலைகள்<br>கு.சகாயதீபா | 20 |
| 6. | பட்டினப்பாலை சித்தரிக்கும் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல்<br>சீ.ரேகா, | 25 |
| 7. | நாட்டுப்புறத் தாலாட்டுப்பாடல்கள் காட்டும் சமுதாயம்<br>ப.கமலா | 31 |
| 8. | திருக்குறள் காட்டும் பெண்ணியக் கோட்பாடுகள்<br>முனைவர் பெ.ராஜேந்திரன் | 37 |
| 9. | திருமணம்- ச.சங்கரி, | 42 |
| 10. | மு.மேத்தாவின் கவிதைகளில் காதல்<br>பொ.லதா, | 46 |
| 11. | பன்முக நோக்கில் கலைகள்<br>கோ. ஜெயசீலன் | 50 |
| 12. | மனித உறவுகளும் மன நலமும்<br>அ. பொன்னுசாமி | 54 |
| 13. | தமிழ்ச் சமூகத்தில் நடுநிலைமை<br>பேரா.ஜெ.தமீமுல் அன்சாரி | 58 |
| 14. | பக்தி இலக்கியங்களில் சமயநெறிக் கோட்பாடுகள்<br>முனைவர் த.நாகம்மாள் | 62 |
| 15. | எட்டுத்தொகையில் பரத்தையின் பருவம்<br>முனைவர். இரா.ஜெகதீசன், முனைவர். ச. காஞ்சனா | 66 |
| 16. | தேவார மூவர் பதிகம் பாடி உயிர்பித்த வரலாறு<br>முனைவர் க. ரமேஷ், முனைவர். ந.கோ.கோமதி | 70 |
| 17. | சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் வாழ்வியல்<br>கோ.சவிதா | 74 |

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>Ethical Values as Revealed in Dravidian Literature (Internationl Conference) |
| பதிப்பாசிரியர்கள் | : | பேரா. **சி.பரசுராமன்**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.<br>பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**<br>பேரா. முனைவர் **க.ரமேஷ்**<br>பேரா. முனைவர் **இரா.செல்வராஜ்**<br>பேரா. முனைவர் **இரா.பிரபாகரன்**<br>பேரா. முனைவர் **சு.வேணு**<br>பேரா. முனைவர் **எஸ்.சாரதா**<br>பேரா. முனைவர் **பா.அ.முனுசாமி** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், |
| விலை | : | ரூ.800/- |
| பக்கங்கள் | : | 639+12 = 651 |
| முதல் பதிப்பு | : | 25-06-2016 ஆனி 11 |
| ஒளியச்சு | : | **அமிர்தகனி ஜெகவீரன்,**<br>சரவணா கிராபிக்ஸ், வேலூர்.<br>செல்: 98658 20640. |
| கிடைக்குமிடம் | : | ஏலகிரி முத்தமிழ் மன்றம்<br>நிலாவூர், நிலாவூர் அஞ்சல்<br>ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்<br>தமிழ்நாடு-635 853. |
| வெளியீடு, உரிமை | : | **ஏலகிரி முத்தமிழ் மன்றம், ஏலகிரிமலை.** |
| அச்சிட்டோர் | : | டுடே பப்ளிகேஷன், சென்னை. |
| ISBN | : | 978-93-81992-40-1 |




# FELICITATIONS

**E.Rathinavelu**
Advocate, Vellore.

To revive and disseminate the greatness and glory of the dravidian lands and their life and literature, Thiru Prof C.Parasuraman has arranged an INTERNATIONAL CONFERENCE on the moral values as revealed in dravidian Literature. The Noble heritage great culture, fine arts, valiant wars, undaunted courage, divisions of lands, divisions of labour the trade to foregine countries and the benevolent rules of kings blissful martial life above all religious unity and others have to be brought out and propagated world wide.

For this laudable service this conference and bringing out of the two volumes of research articles of great scholars, renowned professors, research students and eminent persons "are the first step taken by Elagiri Muththamil Manram and Sri Venkateswara Universtiy Tamil Department, Tirupati.

Deepley researched articles in English, Tamil, Telugu and Kannada are to be read and appreciated. This book will lead to better relations among dravidian states and national integration. The book has to be read and re-read and preserved.

I amply comment the volumes and congratulate the herculean task of the publishers who tirelesly worked to bring out the books in a short period.

I wise them success.

18. மணிமேகலையில் பௌத்தக் கோட்பாடு
மூ.பிச்சப்பிள்ளை ... 78

19. எட்டுத்தொகை அக இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
முனைவர் பொ.இராதாஜெயலட்சுமி ... 84

20. காமம் செப்பாது கண்டது மொழிமோ...
ரா.கோகுலவாச நவநீதன் ... 88

21. வேளாண்மை
முனைவர் மலை.செந்தில்குமார், சி.விஜயன் ... 93

22. திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்
இரா. மணிகண்டன் ... 97

23. தொல்காப்பியர் வாழ்வியல் நெறி
கோ.ராஜா ... 101

24. தமிழ் இலக்கியங்கள் போற்றும் நட்பு
கு.சங்கீதா ... 107

25. சிறு தெய்வ வழிபாட்டின் தனித்தன்மைகள்
பு.முத்துகிருஷ்ணன் ... 112

26. நாட்டுப்புறப்பாடல்களில் குடும்ப உறவுமுறைகளும், தனிமனித வாழ்வும்
ரா.ஹேமாவதி ... 118

27. பிள்ளைத்தமிழ் செய்திகளும், பெண்களின் விளையாட்டுக்களும்
கோ.கவிதா ... 123

28. இனக்குழுச் சமுதாயத்தில் பெண்கள்
க.முரளிதரன் ... 127

29. உளவியல் நோக்கில் காதல்
த. பிரேமகுமாரி ... 131

30. இலக்கியத்தில் மரபுக்கூறுகள்
ல.கு.க.இராஜ்குமார் ... 135

31. பதிற்றுப்பத்தில் கலைஞர்களின் வாழ்வியல் கூறுகள்
முனைவர் க.இரமேஷ் ... 140

32. "இலையுதிர்காலம்" என்னும் நாவலில் சமூக பாத்திரப்படைப்புகள்
சு.செந்தமிழ்செழியன் ... 143

33. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு – ஓர் ஆய்வு
ஆய்வுத்திறவர் தகடூர் தமிழ்க்கதிர் ... 147

34. அகநானூறு காட்டும் விளையாட்டுச்சார் பண்பாடு
கீ.சு.தமிழரசி ... 152

35. தாமஸ்மலைக் குறவஞ்சியில் இயற்கைக் குறியீடுவழி வாழ்வியல் கூறுகள்
தா.வனிதா ... 155





36. குறுந்தொகையுள் கொன்றை மலர்கள்
இரா.கவிதா, ... 160

37. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் உணர்த்தும் திருமணப் பொருத்தம்
பேரா.பீ.பெரியசாமி ... 164

38. குறுந்தொகையில் வாழ்வியல்நெறிகள்
அ.வஜிஹா பேகம் ... 169

39. சீறாப்புராணத்தில் இறையியல் கோட்பாடு
அ.ஆஜிரா பேகம் ... 176

40. திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வழிபாட்டு முறைகள்
ம. துளசி ... 181

41. சங்க இலக்கிய விழுமியங்களில் கல்வி
பி. அனிதா ... 188

42. பொருளாதார ஏற்றத்தாழ்வும் சமூகச்சிக்கல்களும்
த. டேவிட், ... 193

43. திருவள்ளுவர் காட்டும் நானிலங்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
மு.ஜெயலட்சுமி பி.எஸ்.சி.இ ... 199

44. கீழ்க்கணக்கு நானாற்பதில் புறச் செய்திகள்
கு.காந்தி, M.A., M.Phil., ... 208

45. சங்க இலக்கியபெண்பாற் புலவர்களின் பாடல்களில்
பெண்ணியச் சிந்தனைகள்.
முனைவர் ச.பச்சையம்மாள், ... 214

46. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்
எஸ்.குமார் ... 219

47. திராவிட பண்பாட்டில் தமிழரின் மகளிர் நிலை
எம்.செண்பக வள்ளி ... 223

48. உழவும் திருக்குறளும்
முனைவர் க. மோகன்காந்தி ... 228

49, தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் காதல்
கே.ரோஜாரமணி, கே.மணிமேகலை ... 231

50. நீதி நூல்கள் காட்டும் கல்விச் சிறப்புகள்
முனைவர் இரா.செல்வராஜ் ... 237

51. சங்க இலக்கியங்களில் இல்லறப் பெண்களின் ஆளுமை
முனைவர் லி.அலங்காரராஜ் ... 241

52. கவிஞர் வெள்ளியங்காட்டான் காவியங்களில் வாழ்வியல் நெறிகள்
வீ.கே. கார்த்திகேயன் ... 246

53. திருக்குறளில் அரசியல்
முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி, ... 254

**உணர்வு**

உணர்வாவது அறிவு என்றும் அஃதாவது உலகியலாற் செய்யத்தக்கது அறிதல் என்றும் கூறுவர். இதனை, "நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்"(அகம்.110(20)) எனும் அகநானூற்று பாடலில் 'எம் சிற்றில், சிற்றுணவு முதலானவற்றைக் காலாற் சிதைத்துவிட்டு அவ்விடம் நில்லாது எம் தோழியர் கூட்டம் அகன்று சென்றது அவருள்ளும், என்னையே குறித்துப் பார்க்கும் பார்வையோடு, 'நல்ல நெற்றியை உடையவளே! யான் செல்லட்டுமா?' என்று என் நெஞ்சம் வருந்துமாறு கேட்டான்.' என்பதிலும், 241(12), 310(12) ஆகிய பாடலடிகளிலும் உணர்வெனும் மெய்ப்பாடு அமைய பெற்றுள்ளன.

**திரு**

திரு என்பது செல்வம். இதனை, "பொருள் மிக இருப்பினும் இவற்றை யெல்லாம் நாமே துய்ப்போம் என்பது இல்லாமலும், வறுமையே வாட்டி நிற்கும் நிலையிலும், செல்வச் செழுமையோடு இருப்பது போல இருக்கும் இயல்பு கொண்டிருத்தலும் 'திருத்தகவு' என்பதாம்." (தொல்காப்பியர் காட்டும் குடும்பம்,ப.27) என்பர் இரா. இளங்குமரணார். தமிழண்ணல் அவர்கள், "செல்வமுடைமை. செல்வர் போலும் மனமகிழ்ச்சியுடைமை இதிலடங்கும்." (தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம், ப.27) என்பர். இதனை, "மலி நீர் அகல்வாய் யாணர் ஊர!"(அகம்.246.(4)) எனும் அகநானூற்று பாடலில் 'நீர் நிறைந்த அகன்ற வயல்களையுடைய புதிய வருவாயினை உடைய ஊரனே' என்பதிலும் 282(110), 382(913) ஆகிய பாடலடிகளிலும் திருவெனும் மெய்ப்பாடு அமைய பெற்றுள்ளன.

**முடிவுரை**

தெய்வம் கூட்டவோ, அல்லது விதிவழியாகவோ ஆணும், பெண்ணும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்கின்றனர். இச்சந்திப்பு அவர்களின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பார்க்கின்ற எல்லா ஆண் அல்லது பெண்ணால் தாக்கம் ஏற்படுவதாகக் குறிப்பிடப்படவில்லை. பிறப்பு, குடிமை ஆண்மை, ஆண்டு, உறவு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு ஆகிய பத்து ஆளுமைக்குணங்கள் ஒன்றுபட்டிருக்கும் ஆணும் பெண்ணும் எதிர்படும்பொழுது இத்தாக்கம் ஏற்பட்டுப் பின் அது குறிப்பால் ஒருவர் எண்ணத்தை ஒருவர் அறிந்த பின் காதலாக மாறுவது நலம் என்பது தொல்காப்பியர் கருத்து. தமிழ்ச் சமுதாயம் தொல்காப்பியர் காலத்திலேயே ஆணாதிக்கச் சமுதாயமாக இருந்துள்ளது. எனவே மேற்கூறிய பத்து ஆளுமைகள் சிலவற்றில் மிக்கோனாக ஆண் மகன் இருப்பினும் குற்றமில்லை எனக் கூறியுள்ளார். இன்றைய வாழ்விலும் இவ்ஆளுமைகள் ஒத்து இருக்குமேயானால் இல்வாழ்க்கையில் உரசல்கள் தவிர்க்கப்படுவது உறுதி. எனினும், இக்குணங்கள் ஒத்தில்லாத தம்பதியர் ஒத்து வாழ்வதையும், இன்றைய நாளில் காண முடிகிறது. தொல்காப்பியர் காதல் வயப்படும் ஆணும் பெண்ணும் அறிவுவழி செல்ல வேண்டும் என்பதை அவர்களின் முதல் சந்திப்பிலேயே எச்சரித்துவிடுகிறார். மேற்கூறிய பத்து ஆளுமைகள் பெரும்பான்மை ஒத்து இல்லாவிட்டால் அது பிரிவுக்கு வழி வகுக்கும் என்பதே அவர் கருத்து என அறிப்படுகின்றது.



நெறியாளர்:
பேராசிரியர் ம.செந்தில்குமார்,
இணைப்பேராசிரியர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு

அ.வஜிஹா பேகம்,
ஆய்வியல் நிறைஞர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு.



# குறுந்தொகையில் வாழ்வியல்நெறிகள்

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்களில் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் உலக மக்களுக்கே வழிகாட்டக் கூடியன. இத்தகைய தமிழினத்தின் வாழ்க்கை முறையை அகம்,புறம் என்று சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. அதில் குறுந்தொகை அகத்திணை உயர்கொள்கைகளைப் பெற்றிருந்தாலும் புற வாழ்க்கைக்கான செய்திகளையும் எடுத்துரைப்பதில் நயம்மிக்கது. இத்தகைய குறுந்தொகையில் புற வாழ்க்கைக்கான வாழ்வியல் நெறிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புற வாழ்க்கை நெறி**

தனி மனித வாழ்வின் உள்ளம் சார்ந்த நிகழ்வுகளை அகம் என்றும்,மனிதனின் சமுதாய நிகழ்வுகளைப் புறம் என்றும் வரையறை செய்வது தமிழ் மரபாகும். அந்த வகையில் அகத்திணை உயர் கொள்கைகளைப் பெற்ற குறுந்தொகைப் பாடல்களில்,தெளிவிற்காக, கருத்துச்செறிவிற்காக, உவமைக்காக, புற வாழ்க்கைச் சார்ந்த பாத்திரங்களையும், அப்பாத்திரங்களின் வாழ்க்கை இயல்புகளையும் எடுத்துரைக்கும் நோக்கில் பல வாழ்வியல் நெறிகள் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அகப்பாடல்களில் புறம் சார்ந்த கருத்துக்கள் இணைந்திருப்பது தொல்காப்பியர் விதிகளை மீறி அமைந்துள்ளதைக் காணலாம், எனவேதான்

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே (தொல்அகம்.58 )

என்ற நூற்பாவில் புறத்திணைப் பகுதிகளில் இயற்பெயர்கள் பொருந்தி வருமே தவிர அகத்திணைப் பகுதிகளில் பொருந்தி வருதல் இல்லை என்பதை அறியலாம். எனினும் அகவாழ்க்கை இயல்பினை தெளிவுறுத்தவே புறம் சார்ந்த பெயர்களும், மக்களின் அனுபவங்கள், போரின் அனுகுமுறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் தோழி கூற்றாக அமைந்த

குறுந்தொகைப்பாடலில்

வாரல் எம்சேரி தாரல் நின்தாரே
அலரா கின்றால் ஸீரும காவிரிப்
பலர்ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியல் அம் புகவின அம்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்கர்டு அன்ன இவள்
பழிதீர் மாண்நலம் தொலைதல் கண்டே (குறுந் :258)

என்று பரத்தையிற் பிரிந்த தலைவனை நோக்கி தலைவி அழகிழந்தாள், ஆதலின் நினக்கு ஆகும் பயன் ஒன்றில்லை ஈண்டுவாரற்க. என்று தோழி வாயில் மறுக்கின்றாள். என்ற அகச்செய்தியோடு புறச்செய்தியாக தலைவியின் அழகு அழிசியின் ஆர்க்காடு நகரத்திற்க்கு உவமையாகவும்,சேந்தனுடைய தந்தை,வீரக்கள் உண்பவன், விலங்குகளை டேடையாடுவதில் பெருவிருப்பம கொண்ட அழிசி என்பவன் காவிரித்துறையில் வளர்ந்திருக்கும் மருத மரங்களில் யானைகளைக் கட்டுபவன், பகைவர்க்கு நல்ல வாழ்வினைத் தரும் ஒள்ளிய வாளுடையவன் வீரர் தலைவன் என்று அகப்பாடலில் புறச் செய்தியாக அழிசியின் வீரமும், நகரின் சிறப்பும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதை நோக்கும் போது அழிசிக்குப் பாடினாரா? அகத்திற்க்குப் பாடினாரா? என ஐயுறும் அளவிற்கு புறச்செய்தி மிகுந்துள்ளது. இவ்வாறு அகத்திலிருந்து புறத்தைப் பிரிக்க முடியாத அளவுக்கு குறுந்தொகைப் பாடல்களில் மக்களின் வாழ்வியல் நெறிகள் அமைந்துள்ளன.

### கடமை

ஒவ்வொரு மனிதனும் நம்முடைய கடமையை நிறைவேற்றுவதற்கு பொருள் இன்றியமையாததாகிறது. சுற்றத்தாரைப் பாதுகாப்பதற்கும் தம்பால் இரப்பார்க்கு ஈதல்செயலைச் செய்வதற்கும், விருப்பத்தை நிறைவு செய்யும் பொருளை நோக்கி இடங்கள் தோறும் சென்றார் என்பதை

தம் கடன் இறீஇயர் எண்ணி,இடம்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய (குறுந் 255)

என்ற பாடலடி விளக்குகிறது.

தலைவன் தம் கடமையை உணர்ந்து மீளாது, இல்லறம் புரியும் கடமையை நினைத்து அதற்கு உரிய பொருள் தேடச் சென்று அதுமுற்றியே மீள்வர் என்பதை.

நசை நன்கு உடையர் தோழி
இன்துயில் முனிநர் சென்ற ஆறே (குறுந்213)

என்ற பாடலடி மூலம் அறியலாம். வீட்டை மட்டுமல்லாது, நாட்டையும்,வேந்தனால் ஏவப்பட்ட தொழிலை மேற்கொள்வதும் அரசனது ஆணைக்கு கட்டுப்படுத்தலும் முதற் கடமையாகும் என்பதை

வேந்துவிடு தொழிலொடு செலினும் (குறுந்242)

என்ற பாடல் மூலமும், நாட்டுப்பணியாற்றுவதும் தலையாய கடமையாகும் என்பதை புறநாநூற்றிலும்,

"ஈன்று புறந்தருதல் எனதலைக்கடனே" (புறநாநூறு:312)

என்றும்,கடமைகளை

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர்ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் (சிலப்பதிகாரம் :16.7173)

எனச்சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கிறது.

"மருண்டடென னல்லெனோ வுலகத்துப் பண்பே" (குறுந்:99)

என்ற பாடலடி, தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருள், கருவி என்பதையும்,அதனை, ஈட்டுதல் உலகத்துப் பண்பு என்பதையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று குறுந்தொகை எடுத்துரைக்கிறது.

### பொருளீட்டல்

தொழிலை மையமிட்டு கூறப்பட்ட சொல்லே பொருளீட்டல் என்பதாகும்.உழைக்காமல் சோம்பி இருத்தல் இரத்தலைவிட கேவலமான செயலாகக் கருதப்பட்டது. எனவே பொருள்தான் இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை அறிந்த சான்றோர்,அப்பொருளீட்டும் தொழில் தான் ஆடவர்க்கு உயிர் என்பதை

வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந்:135)

என்ற உலகப் பொதுமை அறத்தை எடுத்தியம்புவதை மையக் கருத்தாகக் கொண்டு பொருள் ஈட்டக்கூடிய வினையை மேற்கொள்பவன் ஆடவன் என்பதை உலகப் பொதுமைக் கோட்பாடாக எடுத்தியம்புகிறது. தம்முயற்சியில் தேடிய பொருளையே ஒருவன் செலவு செய்ய வேண்டும் முன்னோர்தேடி வைத்த பொருளைச் செலவு செய்பவர்கள் பொருள் உள்ளவர்களாக மதிக்கப்பட மாட்டார்கள் என்பதை,

'உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்"

என்ற அடியின்' மூலம் தமிழர் தம் உயர்ந்த சிந்தனை வெளிப்படுத்துகிறது.

எனவேதான் உழவும், வாணிகமும்,கைத்தொழிலும்,சிறந்த பொருளீட்டுவதற்கு ஆதாரமாக இருந்தது. இதில் வேளாண்மையே மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தி வளமாக வாழவும்,கடமைகளைச்

செய்யவும், உறுதுணையான முதன்மைத் தொழிலாகும் என்பதை தொல்காப்பியத்திலும்

**வேளாண் மாந்தர்குழுதூனல்ல**
**தில்லென மொழிப** (தொல்மரபியல்நூ.80)

எனறு கூறுகிறது. சங்ககாலத்தில் வாழ்ந்த குறுந்தொகை மக்களும் பல வகைத் தொழில்கள் செய்து தம் பொருளாதாரத்தை உயர்லீத்தினர். அதில் தரிசாக கிடந்த நிலத்தையும் உழுது பயனுடையதாக்கிக் கொண்டனர்,என்பதை

**முதைப் புனம் கொன்ற ஆர்கலி உழவர்**
**விதைகுறு வட்டி போதொடு பொதுளர்**
**பொழுதோ தான்வந் தன்னே** (குறுந்:155)

என்ற வரிகள் மூலம் வீண் என்று எதையும் நினையாது நாள் முழுவதும் கடினமாக உழைக்கின்ற உழவனின் பொருளார்வத்தையும் தொழில் திறத்தையும் அறியமுடிகிறது. ஒருபொருளுக்கு மற்றொரு பொருளை விலையாக கொடுத்து பண்டமாற்று முறையும் மேற்கொண்டனர் என்பதை,

**பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடை இடைமகள் சென்னி** (குறுந்:221)

என்ற வரிகள் மூலம் இடையர்கள் பாலைவிற்று அதற்கு விலையாக உணவுப் பொருள்களைப் பெற்றுச் சென்றனர்.கடல் வாணிபம் குறித்தும் கூறப்பட்டுள்ளதை,

**எந்தையும்**
**நீலநிறப் பெருங்கடல் புக்கன் யாயும்**
**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள்** (குறுந்:269)

என்ற பாடல் மூலம் தந்தை கடல் வாணிபத்தில் மீன் வேட்டைக்குச் சென்றதாகவும் தாய் வெண்ணெல் பெற்றுவர உப்பு வாணிகத்திற்குச் சென்றதாகவும் இப்பாடல் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

**போர் நெறி**

சங்க காலத்தில் அரசர்களும், வேந்தர்களும் குறுநிலமன்னர்களும், பல்வேறு காரணங்களுக்காகத் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். அவ்வாறு போர் நிகழுங்கால் போரில் அறநெறியைப் பின்பற்றினா. அந்த வகையில் குறுந்தொகை அகநூலாயினும் அது போர்அறம் பற்றியும் எடுத்துரைக்கிறது

**அஞ்சுவது உடையன் ஆயின் வெம்போர்**
**நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி**
**முனைஆன் பெருநிரை போல**
**கிளையொடு காக்க தன்கொழுநன் மார்பே** (குறுந்:80)

இப்பாடலடிகள் மூலம் பசுக்களைப் பாதுகாக்கும் போரின்அறம் கூறப்பட்டுள்ளது. போரில் அரசரும் வீரரும் அறநெறி பிறழாது நடுநிலைமையில் வஞ்சியாக எதிர் நின்று போரிட்டனர் என்பதை நுகம்படக்கடத்தல் என்று எடுத்தியம்புகிறது. தமிழ் வேந்தர்கள் மேற்கொண்ட போர்முறை அறத்தின் வழியிலேயே அமைந்திருந்தது,அறநெறி முறை பிறழாது போர் புரிந்த மன்னர்கள்.

**அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்** (புறநா:62)

என்று புறநானூற்றில் போற்றப்பட்டுள்ளனர்.போரில் ஈடுபடுவதைத் தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர்.

**ஈகை நெறி**

இரவு நேரத்தில் "புறத்தே யாரேனும் உள்ளீரோ "என்று வினவி அறிந்த பின்னரே வாயில் கதவடைப்பர். யாவரையும் அழைத்து உண்பிப்பர். இத்தகைய ஈதலாகிய பேரறத்தை அக்கால மக்கள் பெரிதும் கடைப்பிடித்தனர் என்பதை

**'பலர் புகுவாயில் அடைப்பக்கடவுநர் வருவீருளீரோ"** (குறுந்:118)

என்பதால் அறியலாம்.ஈதலாகிய அறமும் துய்த்தலாகிய இன்பமும் பொருள் இல்லாதவர்க்கு இல்லை என்பதை,

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கில்லெனச்"** (குறுந்:63)

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

**நட்பு நெறி**

தனிமனிதனை சமுதாயத்துடன் இணைக்கும் பாலமாக விளங்கும் நட்பு, மனிதப் பண்பாட்டுடன் கலந்து விட்ட சிறந்த சமதாய நெறி ஆகும். இதனையே

**இனத்தினியன்ற**
**இன்னாமையினும் மினிதோ**
**இனிதெனப் படூஉம் புத்தே ணாடே** (குறுந்:288)
**'மருவி னினியளவு முளவோ"** (குறுந்:322)

எனற பாடலடிகள் துன்பத்தைத் தருவதாக இருந்தாலும். நட்பே தேவர் உலகத்தைக் காட்டிலும்சிறந்தது, ஒருவரோடு ஒருவர் நட்பு பூண்டு விளங்கியமையால் ஏற்படும் இன்பத்தை விட வேறு இன்பம் உண்டோ என்று கூறுவதனால் நட்பின் பெருமை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**நீதி நெறி**

அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய கருத்துக்களை நீதிகளின் வழியாக எடுத்துரைக்கின்றன். பெரிய நன்மைகள் செய்தால் அவரை யாவரும் விரும்புவர் என்பது

**'பொருநன் றாற்றிற் பேணாரு முளரோ"** (குறுந்:115)

என்ற வரிகள் எடுத்தியம்புகிறது. நல்ல புகழையும் நீதியையுடைய நெஞ்சமும் படைத்தவர் தாம் முயன்று ஈட்டிய செல்வம் எல்லாம் தகுந்தவர்களுக்கு உதவுவதற்கே என்பது

**நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற**
**கடப்பாட டாளன் உடைப் பொருள் போலத்**
**தங்குதற்கு உரியது அன்று** (குறுந்:143)

என்ற பாடலின் வரிகள் மூலம், அறியலாம்.ஒருவருக்கு வழங்கிய பொருளை மீண்டும் திரும்பப் பெறுதல் இழிவென்று கருதுவர் எனபதை,

**இடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டி**
**கொடுத்தவை தாவென் சொல்லினும்**
**இன்னா தோ நம் மின்னுயிரிழப்பே** (குறுந்:341)
**என்ற பாடலடிகள் நீதியை எடுத்தியம்புகின்றன்.**

**பக்தி நெறி**

பக்தி நெறிக் கென்று தனியாக நூல்கள் தோன்றவில்லையென்றாலும் பண்டைய சங்கப் பாடல்களில் நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நோக்கில் தெய்வங்களை வணங்கி வந்தனர். அந்தவகையில் ஐவகை நிலங்களுக்குஏற்ப வழிபாட்டுமுறைகளும், வழிபாட்டு தெயவங்களும் அமைந்துள்ளன. இதை தொல்காப்பியத்தில்

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே** (அகத்:950)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு நிலத்திலும் தெய்வங்களை வழிபடும் முறை வெவ்வேறு விதமாக இருந்தது. அதில் குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகனுக்கு செய்யும் வழிபாடாக வெறியாட்டு முறை இருந்தது.ஆட்டினது கழுத்தை அறுத்து அதன் உதிரத்தைச் சிந்திக் களம் முழுவதும் தினைக் கதிரைப் பரப்பி வைப்பது வெறிக்களம் புனைவதில் முதல் நிலை ஆகும். இதை குறுந்தொகையில்

**மறிக்குரல்அறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்** (குறுந்:263)

என்றும், முருகனுக்கு மறியறுத்துத் தினையரிசி விரவி வழிபடும் முறை குறிஞ்சி நிலத்தில் இருந்தது என்பதை தொல்காப்பியத்திலும்

**வெறியறி சிறப்பின் வெளவாய் வேலன**
**வெறியாட்டு அயர்ந்த் காந்தரும்** (தொல்புறத்.5)

என்று எடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் பலவாக இருந்தாலும், குறுந்தொகை காட்டும் அகம் பற்றிய வாழ்வியல் செய்திகளோடு புற வாழ்க்கை நெறிகளையும் எடுத்துரைக்கிறது. அவ்வாறு எடுத்துரைத்து பழங்கால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் பிற்காலத்தாரும் படித்து மகிழ்ந்து செய்யுள் நலனை நுகர வேணடும் என்ற உயரிய நோக்கம் குறுந்தொகைப் பாடல்களில் காணலாம்.

**துணை நூல்கள்**


1. இலக்கிய ஆய்வு — முனைவர் கார்த்திகேயன்
2. தொல்காப்பியம் — இளம்பூரணர்
3. புறநானூறு — புலியூர்கேசிகன்
4. குறுந்தொகை — நாகராஜன்
5. சிலப்பதிகாரம் — புலியூர்கேசிகன்



ISBN 978-93-81992-40-1

9 789381 992401

# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# Ethical Values as Revealed in Dravidian Literature

International Conference

Volume-1

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. சி. பரசுராமன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஜான்மனுவேல்

முனைவர் க. ரமேஷ்

முனைவர் இரா. செல்வராஜ்

முனைவர் இரா. பிரபாகரன்

முனைவர் க. வேணு

முனைவர் ச. சாரதா

முனைவர் பா.அ.முனுசாமி

## FOREWORD BY PUBLISHER'S

**Prof. C.Parasuraman,**
Convener & President,
Elagiri Muththamil Manram
Asst. Prof. in Tamil. GTM College, Gudiyattam, Vellore Dist.

The eminence and excellence, the historicity and nobility, the heritage and culture of Dravidian lands are now-a-days being neglected, by students and by some Persons of letters. To bring forth those greatness. I and my friends have set up a society called "Elagiri Muththamil Manram". It has to devote to conduct conferences, seminars, public meetings, lectures and debates. Further books of value and research are to be published. As a first step to achieve these objects, an International conference is convened at Yelagiri hills on the theme "Ethical values as revealed in Dravidian Literature". In Collaboration with Sri Venkateswara University Tamil Department, Tirupati. In the Conference great Scholars and Professors have participated and submitted their deeply researched essays. An anthology of these are made into two edited volumes that adorns your hands. I hope it will serve its purpose.

I implore all men of letters to extend their further support, So that I may follow suit.

I extend my heart-felt thanks to all research scholars and men of learning who have submitted their articles. The head of the departments of college and universities who have advised and guided me, are thanked. All those who worked for the success of the conference are thanked. I am more thankful to Jegaveeran pandian who designed and brought out two published volumes in a fine typeset, I thank with gratitude ie. E.Rathinavelu, K. Subramanian IKS, Dr. Prabhakaran, Dr. S. Venu, Dr. P.A. Munasamy, who have guided me and helped me for the grand success of Conference and sessions of discussion that followed.

Men of name and fame belonging to Elagiri Hills, who stood by my side and heiped for the success of all the events, are, thanked. The Philanthropist who have helped monetarily are also thanked.

**Prof. C.Parasuraman,**
Convener

## பொருளடக்கம்

பக்கம்

1. வாழ்வியல் நெறிகள் கட்டமைப்பில் யாக்கை நிலையாமை
முனைவர் கி.சங்கரநாராயணன் ... 01
2. சிலப்பதிகாரத்தில் கண்ணகி தெய்வநிலையடைதல்
அ.முத்துகிருஷ்ணன் ... 05
3. திராவிட மொழிகளின் ஒப்பியல்புகள்
முனைவர் செ.பற்குணன் ... 11
4. முத்தமிழ்க் காப்பியத்தில் பன்முகச் சமயம்
சி.தேவிகா. ... 16
5. தேம்பாவணியில் கலைகள்
கு.சகாயதீபா ... 20
6. பட்டினப்பாலை சித்தரிக்கும் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல்
சி.ரேகா, ... 25
7. நாட்டுப்புறத் தாலாட்டுப்பாடல்கள் காட்டும் சமுதாயம்
ப.கமலா ... 31
8. திருக்குறள் காட்டும் பெண்ணியக் கோட்பாடுகள்
முனைவர் பெ.ராஜேந்திரன் ... 37
9. திருமணம்- ச.சங்கரி, ... 42
10. மு.மேத்தாவின் கவிதைகளில் காதல்
பொ.லதா, ... 46
11. பன்முக நோக்கில் கலைகள்
கோ. ஜெயசீலன் ... 50
12. மனித உறவுகளும் மன நலமும்
அ. பொன்னுசாமி ... 54
13. தமிழ்ச் சமூகத்தில் நடுநிலைமை
பேரா.ஜெ.தமீமுல் அன்சாரி ... 58
14. பக்தி இலக்கியங்களில் சமயநெறிக் கோட்பாடுகள்
முனைவர் த.நாகம்மாள் ... 62
15. எட்டுத்தொகையில் பரத்தையின் பருவம்
முனைவர். இரா.ஜெகதீசன், முனைவர். ச. காஞ்சனா ... 66
16. தேவார மூவர் பதிகம் பாடி உயிர்பித்த வரலாறு
முனைவர் க. ரமேஷ், முனைவர். ந.கோ.கோமதி ... 70
17. சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் வாழ்வியல்
கோ.சவிதா ... 74

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>Ethical Values as Revealed in Dravidian Literature (Internationl Conference) |
| பதிப்பாசிரியர்கள் | : | பேரா. **சி.பரசுராமன்**<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.<br>பேரா. முனைவர் **ஜான்மனுவேல்**<br>பேரா. முனைவர் **க.ரமேஷ்**<br>பேரா. முனைவர் **இரா.செல்வராஜ்**<br>பேரா. முனைவர் **இரா.பிரபாகரன்**<br>பேரா. முனைவர் **சு.வேணு**<br>பேரா. முனைவர் **எஸ்.சாரதா**<br>பேரா. முனைவர் **பா.அ.முனுசாமி** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், |
| விலை | : | ரூ.800/- |
| பக்கங்கள் | : | 639+12 = 651 |
| முதல் பதிப்பு | : | 25-06-2016 ஆனி 11 |
| ஒளியச்சு | : | அமிர்தகனி ஜெகவீரன்,<br>சரவணா கிராபிக்ஸ், வேலூர்.<br>செல்: 98658 20640. |
| கிடைக்குமிடம் | : | ஏலகிரி முத்தமிழ் மன்றம்<br>நிலாவூர், நிலாவூர் அஞ்சல்<br>ஏலகிரிமலை, வேலூர் மாவட்டம்<br>தமிழ்நாடு-635 853. |
| வெளியீடு, உரிமை | : | **ஏலகிரி முத்தமிழ் மன்றம், ஏலகிரிமலை.** |
| அச்சிட்டோர் | : | டுடே பப்ளிகேஷன், சென்னை. |
| ISBN | : | 978-93-81992-40-1 |




# FELICITATIONS


**E.Rathinavelu**
Advocate, Vellore.


To revive and disseminate the greatness and glory of the dravidian lands and their life and literature, Thiru Prof C.Parasuraman has arranged an INTERNATIONAL CONFERENCE on the moral values as revealed in dravidian Literature. The Noble heritage great culture, fine arts, valiant wars, undaunted courage, divisions of lands, divisions of labour the trade to foregine countries and the benevolent rules of kings blissful martial life above all religious unity and others have to be brought out and propagated world wide.

For this laudable service this conference and bringing out of the two volumes of research articles of great scholars, renowned professors, research students and eminent persons "are the first step taken by Elagiri Muththamil Manram and Sri Venkateswara Universtiy Tamil Department, Tirupati.

Deepley researched articles in English, Tamil, Telugu and Kannada are to be read and appreciated. This book will lead to better relations among dravidian states and national integration. The book has to be read and re-read and preserved.

I amply comment the volumes and congratulate the herculean task of the publishers who tirelesly worked to bring out the books in a short period.

I wise them success.

18. மணிமேகலையில் பௌத்தக் கோட்பாடு
மு.பிச்சப்பிள்ளை ... 78

19. எட்டுத்தொகை அக இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
முனைவர் பொ.இராதாஜெயலட்சுமி ... 84

20. காமம் செப்பாது கண்டது மொழிமோ...
ரா.கோகுலவாச நவநீதன் ... 88

21. வேளாண்மை
முனைவர் மலை.செந்தில்குமார், சி.விஜயன் ... 93

22. திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்
இரா. மணிகண்டன் ... 97

23. தொல்காப்பியர் வாழ்வியல் நெறி
கோ.ராஜா ... 101

24. தமிழ் இலக்கியங்கள் போற்றும் நட்பு
கு.சங்கீதா ... 107

25. சிறு தெய்வ வழிபாட்டின் தனித்தன்மைகள்
பு.முத்துகிருஷ்ணன் ... 112

26. நாட்டுப்புறப்பாடல்களில் குடும்ப உறவுமுறைகளும், தனிமனித வாழ்வும்
ரா.ஹேமாவதி ... 118

27. பிள்ளைத்தமிழ் செய்திகளும், பெண்களின் விளையாட்டுக்களும்
கோ.கவிதா ... 123

28. இனக்குழுச் சமுதாயத்தில் பெண்கள்
க.முரளிதரன் ... 127

29. உளவியல் நோக்கில் காதல்
த. பிரேமகுமாரி ... 131

30. இலக்கியத்தில் மரபுக்கூறுகள்
ல.கு.சு.இராஜ்குமார் ... 135

31. பதிற்றுப்பத்தில் கலைஞர்களின் வாழ்வியல் கூறுகள்
முனைவர் க.இரமேஷ் ... 140

32. "இலையுதிர்காலம்" என்னும் நாவலில் சமூக பாத்திரப்படைப்புகள்
சு.செந்தமிழ்செழியன் ... 143

33. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு - ஓர் ஆய்வு
ஆய்வுத்திறவர் தகடூர் தமிழ்க்கதிர் ... 147

34. அகநானூறு காட்டும் விளையாட்டுச்சார் பண்பாடு
கீ.க.தமிழரசி ... 152

35. தாமன்மலைக் குறவஞ்சியில் இயற்கைக் குறியீடுவழி வாழ்வியல் கூறுகள்
தா.வனிதா ... 156





36. குறுந்தொகையுள் கொன்றை மலர்கள்
இரா.கவிதா, ... 160

37. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் உணர்த்தும் திருமணப் பொருத்தம்
பேரா.பீ.பெரியசாமி ... 164

38. குறுந்தொகையில் வாழ்வியல்நெறிகள்
அ.வஜிஹா பேகம் ... 169

39. சீறாப்புராணத்தில் இறையியல் கோட்பாடு
அ.ஆஜிரா பேகம் ... 176

40. திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வழிபாட்டு முறைகள்
ம. துளசி ... 181

41. சங்க இலக்கிய விழுமியங்களில் கல்வி
பி. அனிதா ... 188

42. பொருளாதார ஏற்றத்தாழ்வும் சமூகச்சிக்கல்களும்
த. டேவிட், ... 193

43. திருவள்ளுவர் காட்டும் நானிலங்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு
மு.ஜெயலட்சுமி பி.எஸ்.சி.இ ... 199

44. கீழ்க்கணக்கு நானாற்பதில் புறச் செய்திகள்
கு.காந்தி, M.A., M.Phil., ... 208

45. சங்க இலக்கியபெண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண்ணியச் சிந்தனைகள்.
முனைவர் ச.பச்சையம்மாள், ... 214

46. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்
எஸ்.குமார் ... 219

47. திராவிட பண்பாட்டில் தமிழரின் மகளிர் நிலை
எம்.செண்பக வள்ளி ... 223

48. உழவும் திருக்குறளும்
முனைவர் க. மோகன்காந்தி ... 228

49. தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் காதல்
கே.ரோஜாரமணி, கே.மணிமேகலை ... 231

50. நீதி நூல்கள் காட்டும் கல்விச் சிறப்புகள்
முனைவர் இரா.செல்வராஜ் ... 237

51. சங்க இலக்கியங்களில் இல்லறப் பெண்களின் ஆளுமை
முனைவர் லி.அலங்காரராஜ் ... 241

52. கவிஞர் வெள்ளியங்காட்டான் காவியங்களில் வாழ்வியல் நெறிகள்
வீ.கே. கார்த்திகேயன் ... 246

53. திருக்குறளில் அரசியல்
முனைவர் நடம்பு. அறிவுடைநம்பி, ... 254

நெறியாளர்:
பேராசிரியர் ம.செந்தில்குமார்,
இணைப்பேராசிரியர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு

அ.ஆஜிரா பேகம்,
ஆய்வியல் நிறைஞர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு.



# சீறாப்புராணத்தில் இறையியல் கோட்பாடு

**முன்னுரை**

இறைவனின் அருளைப் பெறுவதற்காக ஒவ்வொரு மதத்திலும் பல்வேறு வகையான வழிமுறைகள் காணப்படுகின்றன.அந்நிலையில் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு_ அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாற்றைக் கூறுவது சீறாப்புராணம் எனும் காப்பியம் ஆகும். இக்காப்பியத்தில் இஸ்லாமியர்களின் இறையியல்கோட்பாடு பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் இஸ்லாமியர்களின் இறையியல்கோட்பாடு குறித்தும்அவை எங்கனம்சீறாப்புராணத்தில்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின்நோக்கமாகும்.

**இறையியல்கோட்பாடு**

உலகிலுள்ள அனைத்துச் சமயங்களின் இலட்சியமும், முடிவும் இறைவனை அடைதல் அல்லது இறைவனின் அருளைப்பெறுதலாகும். தாம் ஏற்றுக்கொண்ட இறைவனை வழிபடும் ஒழுகலாறுகள், நியதிகள் இறையியல்கோட்பாடுகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை நெறிகளைக் கற்றுக்கொடுக்கும் விதமாகவே இந்த இறையியல்கோட்பாடுகள் அமைகின்றன.ஒரு மனிதன் தன்வாழ்க்கைப் பாதையில் முறைதவறி செல்லாமல் இருக்க கட்டுக்கோப்பாகவும், இறைவனால் வழங்கப்பட்ட இந்த வாழ்க்கையை செம்மையாக நடத்தவும் இறையியல் கோட்பாடுகள் துணைபுரிகின்றன.

இஸ்லாம் ஓர் இயற்கை மார்க்கம் ஆகும். இந்த இஸ்லாத்தில் உள்ள இறைநம்பிக்கை, ஓரிறைக்கொள்கை போன்றவற்றை ஒப்புக்கொள்ளத் தூண்டுகின்ற எல்லாவகையான மூலங்களையும் காரணங்களையும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். அதனடிப்படையில் இஸ்லாமியர்களின் ஐந்து முக்கியக்கடமைகள் உள்ளன. அவை.

(அ) இறைபோற்றுதல்(கலிமா)

(ஆ) தொழுகை

(இ) நோன்பு

(ஈ) கட்டாயக்கொடை (ஜக்காத்)

(உ) புனிதப்பயணம் (ஹஜ்)

இந்த ஐம்பெருங்கடமைகளையும் இறையியல் கோட்பாடாகக்கொண்டு இறைவனை அடைதலே இஸ்லாத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இறைபோற்றுதல் (கலிமா):

இறைபோற்றுதல் என்பது இஸ்லாத்தின் அடிப்படைத்தத்துவமாகும். அத்தத்துவமானது,

'லாஇலாஹ இல்லல்லாஹு_ முஹம்மதுர்ரசூலுல்லாஹி'

இதன்பொருள்,'வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமில்லை.முஹம்மத்ரசூல் சல்லல்லாஹு_ அலைஹி வஸல்லம் அவனுடைய திருத்தூதர் ஆவர்" என்பதாகும்.இதை மொழிதல் இஸ்லாத்தின் முதற்கடமை ஆகும்.இறைவன் படைத்த முதல் மனிதராகிய ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உயிர் இந்த மூலமந்திரத்தைச் சொல்லிக் கொண்டே பிறந்தது என்றும்,அவர்முதன்முதலாகத் தம் கண்களைத் திறந்து கண்டது சொலீக்கத்தின் வாயிலில் எழுதப்பட்டுள்ள இந்த வாசகம தான் என்பதை,

'தூயநற்கலிமா தன்னைச்சொல்லியங்கிருந்த தன்றே"
(சீறா:தலைமுறை 07)

"உரைதெரி கலிமா வோதி யோதியங்கிருந்து சீவ
னிருவழி தனி லிறங்கி யிருந்த கண்விழித்துச்சொக்கச்
சொரிகதிர் வாயின்மேலாய்நோக்கின்சுடர்க ரூங்கும்
வரியுறு கலிமாத்தன்னை வளம்பெறக்கண்டதன்றே"
(சீறா:தலைமுறை08)

என்ற பாடலடிகளின் வாயிலாக சீறாப்புராணத்தில் குறிப்பிடபபட்டுள்ளது.

இந்த மூலமந்திரத்தை உறுதியாக நம்பி ஏற்பவனே உண்மையான முஸ்லிம் ஆவான்.நம்பி ஏற்றதோடு அதை தவறாமல் நடைமுறைப்படுத்தி வருவதே இஸலாமிய வாழ்க்கை நெறியில் சேர்தல் ஆகும். என்று,

'ஒருத்தனா யகனவற்குரிய தூதென
மருத்தமே யுரைகலி மாவந்நிணடணயப்
பொருத்தமீமானடை புனைத லாமமல்
திருத்தமே விஜயயிசு லாமிற்சேர்தலே"
(சீறா:தொழுகை02)

எனற பாடல்வரிகளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

### தொழுகை

இஸ்லாமின் ஐந்து கடமைகளுள் தொழுகையே முதன்முதலாக இறைவனால் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு_ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விதிக்கப்பட்டது. இஸ்லாமியர்ஒரு நாளில் ஐந்து வேளையாக தொழுகை செய்து இறைவனை வழிபடுகின்றனர்.

"தொழுகை மானக்கேடான செயல்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் மக்களைத் தடுக்கிறது." என்றும்,

(திருக்குர்ஆன்22:45)

"தொழுகையை உள்ளச்சத்தோடு செய்பவர்கள் வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் வீணான செயல்களிலிருந்து விலகியிருப்பார்கள்." (திருக்குர்ஆன்23:13)

என்றும் திருக்குர்ஆனில் தொழுகை குறித்துக் கூறப்பட்டுள்ளது. இதையே சீறாப்புராணத்தில்,

**"நெறிநேர்வழுவாமற்**
**பந்தி பெறநின்றறுந்தொழுகை**
**படித்தார்பாவந்துடைத்தாரே"**

(சீறா:தொழுகை41)

என்ற பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளதை நன்கு அறியலாம்.இஸ்லாத்தின் பார்வையில் தொழாதவன் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதற்கே தகுதியற்றவன் ஆவான். பள்ளிவாசலில் ஐவேளைத் தொழுகைக்காகக் கூடும்போது ஏழை, பணக்காரன்என்ற பாகுபாடின்றி ஒன்றாகத் தொழுகிறார்கள்.மக்களை உயர்வு தாழ்வின்றி வாழக்கற்றுக்கொடுப்பதே தொழுகையின் நோக்கமாகும்.

### நோன்பு

இஸ்லாமியர் நெறிப்படி விடியற்காலையிலிருந்துத் தொடங்கி இரவுத்தொடக்கம் வரை உண்ணாமலும்,அருந்தாமலும் இருப்பது நோன்பு எனப்படுகிறது .இது இஸ்லாமியர்களின ஐம்பெருங்கடமைகளுள் ஒன்றாகும். இந்த நோன்பு நோற்கும் காலம் இரமலான் மாதத்தின முப்பது நாட்களாகும். இரமலான் நோன்பை உறுதி கொண்ட அனைத்து இஸ்லாமியர்களின் மீதும் இறைவன் கட்டாயக் கடமையாக்கியுள்ளான்.என்று,

**"பெறுகதி றமலா லென்னப்பெருகிய நோன்பு தன்னை**
**யுறுதிகொண்டெவர்க்குஞ்செவ்வி யுறபறுலாக்கி னேனென்"**

(சீறா:பதறு.01) என்னும் பாடலின் வாயிலாக இரமலான் நோன்பு குறித்து அறியலாம்.

உடலளவிலும், உள்ளத்தளவிலும் மக்களின் ஒழுக்க முறையை வலிமைப்படுத்துவதற்காகவே திருக்குர் ஆன் இறக்கப்பட்ட இரமலான் மாதத்தில் நோன்பை நோற்பதற்கு இறைவன் விதித்துள்ளான். இறைஉணர்வு, ஒழுக்கஉணர்வு இவற்றோடு சமூக உணர்வையும் நோன்பு மக்களுக்கு கற்றுக்கொடுக்கிறது. உண்ணாமல்,பருகாமல் நோன்பிருக்கும் போது தான் பசி,பட்டினியால் ஏழை படும் துன்பத்தை உணர்ந்து உள்ளத்தால் ஈகைப்பண்பு தோன்றும். அதோடு நோன்பானது உடலின் இரத்தஅழுத்தம், செரிமானக்கோளாறு போன்ற நோய்களை குணப்படுத்தி உடலுக்கும் பல நன்மைகளைத் தருகிறது.

### கட்டாயக்கொடை (ஜக்காத்)

இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளுள் நான்கனவது கடமையாக இருப்பது ' ஜகாத்" என்னும் கட்டாயக்கொடை. கட்டாயக்கொடை என்பது செல்வந்தர்கள் தங்கள் பொருளின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு அளிப்பதாகும்.அதாவது, பருவம் அடைந்த ஓர் இஸ்லாமியர் தன்னறிவு மிக்கவராகவும், தன்னிடம் உள்ள செல்வங்கள் அனைத்திற்கும் தாமே அதிகாரம் பெற்றவராகவும் இருந்தால்அவர் மீது கட்டாயக்கொடை கடமையாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இஸ்லாமியரும் தான் உழைத்து சேர்த்த பொருளில் கண்டிப்பாக இறைவழியிலும் செலவு செய்ய வேண்டும் என்பதை,

**"எவர்பொன்னையும் வெள்ளியையும் சேர்த்து வைத்துக் கொண்டு அதை இறைவழியில்செலவு செய்யாதிருக்கிறார்களோ அவர்களுக்கு கடுமையான தண்டனையுண்டு." (திருக்குர்ஆன் 9:34)**

என்று திருமறையில் கூறப்பட்டுள்ளது. 'இந்தக் கட்டாயக்கொடை பற்றிய குறிப்பு சீறாப்புராணத்தில் இல்லை."

### புனிதப்பயணம்

இஸ்லாமியர்களின் ஐந்தாவது கடமை புனிதப்பயணம் மேற்கொள்ளுதல் ஆகும். இந்த புனிதப்பயணம் மேற்கொள்ளுதல் என்பது திருமக்கா மாநகரத்தினை நாடிச்செல்லுதல் ஆகும் . வயது வந்த முஸ்லீம் ஒருவர் தன்னுரிமை பெற்றும், உடல்நலத்துடனும் பயணம் சென்றுவரப் போதிய பண வசதி பெற்றும் இருந்தால் அவர் தம் வாழ்நாளில் ஒருமுறையாவது புனிதப்பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று கடமையாக்கப்பட்டுள்ளது. இந்த "ஹஜ்" என்னும் புனிதப்பயணம் இறைவனால் கட்டாயக்கடமையாக்கப்பட்டது என்று சீறாப்புராணத்தில் குறிப்பிட்டுள்ளதை,

**"றுலக்கமுற வந்தகச்சு பறுலானள**
**தின்றுமுதற்றொழுவீரென்றே"** (சீறா:ஹுமாமீமான் 01)

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். இதில் "பறுல்" என்பது கட்டாயக் கடமை என்பதைக் குறிக்கும்.

மேற்கண்ட ஐந்து கடமைகளும் மக்களுக்காக இறைவனால் கட்டாயக்கடமையாக்கப்பட்டதே என்றும்

"நீதிலா மறைப்பொருளாய்த்திகழொளியாய்
நிறைந்த அல்லாச்செகத்தின்மேற்றன்
றூதரா யுமையிருக்க வனுப்பினதுங்
காலமைந்துந்தொழுகை வென்றுங்
காதலுடன் சகாத்து நோன்புகச்சும்
பறுலெனவே கழறு மைந்தும்

பொய்யாத நபிவசன மைந்துக்கைந்து
தரமிறைமேற்புகன்றா ராணை" (சீறா:லுமாமீமான்5,6)

சீறாப்புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓர் உண்மையான முஸ்லீம் என்பவர் ஐந்து கடமைகளை நிறைவேற்றுவதோடு, 'இறைவன்மீதும், வானவர்கள் மீதும், இறுதித்தீர்ப்பு நாள்மீதும், இறைத்தூதர் மீதும், திருமறை மீதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். தன்னிடமுள்ள பொருள்களைச் சுற்றத்தார்க்கும், வறியவர்க்கும், வழிப்போக்கர்கட்கும், இரவலர்க்கும், கொடுத்து உதவுதலும், தொழுகையைக் கடைப்பிடித்தலும், ஸகாத்து கொடுத்து வருதலுமே நற்செயல்களாம்! இன்னும் வாக்குறுதியைக் காப்பாற்றுதலும், துன்பத்திலும், இழப்பிலும், கடுமையான போர்வேளையிலும் பொறுமையைக்கடைப்பிடித்தலும் நற்செயல்களேயாம். இத்தகைய நற்செயல்களைச் செய்பவர்கள்தாம் உண்மையான முஸ்லிம்கள்"

(திருக்குர் ஆன்2:177)

என்று திருமறையில் குறிப்பிட்டுள்ளதையும் இஸ்லாமியரின் இறையியல் கோட்பாடாகக் குறிப்பிடப்படுகிறது.

**முடிவுரை**

மேற்கண்ட கருத்துகளின் வாயிலாக இறைவழிபாடு என்பது மனிதனின் உடலையும், உள்ளத்தையும் செம்மைப்படுத்தி வாழ்வை சிறப்பாக்கும் என்றும். அத்தகைய இறையியல்கோட்பாட்டுச் செய்திகள் சீறாப்புராணத்திலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளன என்பதை நாம் தெளிவாக கண்டுணரலாம்.

துணைநூல்கள்


1. **உமறுப்புலவரின் சீறாப்புராணம் மகாமதி சதாவதானி கே.பி.செய்குத்தம்பி பாவலர்**
2. **நெஞ்சையள்ளும்சீறா சிலம்பொலி சு.செல்லப்பனார்**
3. **திருக்குர்ஆன்**





**ம. துளசி**
ஆய்வியல் நிறைஞர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு.


# திராவிட மொழி இலக்கியங்கள் காட்டும் வழிபாட்டு முறைகள்

**முன்னுரை**

திராவிட மொழிகளின் பழைமையான இலக்கியங்களையும், இலக்கணங்களையும் கொண்டுள்ளது தமிழ்மொழி. பிற திராவிட மொழிகளின் இலக்கியங்கள் பிந்திய நிலையில் அமைந்திருக்க தமிழ் மொழியின் இலக்கியங்களோ காலத்தால் பல நூற்றாண்டுகள் முந்தியருக்கக் காணலாம். எத்தனையோ புலவர்கள் பல்வேறு செய்திகளைப் பாடிச் சென்ற நிலையில் தமிழ் இலக்கியம் பிறந்தது. சங்க காலப் பாடல்களே தமிழ் இலக்கியத்தின் முதல் கட்டமாகவும் முழுமையான பொக்கிஷமாகவும் இன்று தமிழரிடையே வாழக் காண்கிறோம். அகமும் புறமும் அவற்றிலே காணும் ஏற்றமும், எழிலும் எத்தனையோ எண்ணங்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்திவிடும். இந்த உலகங்களையெல்லாம் படைத்தல், அவற்றைக் காத்தல், அவற்றை அழித்தல் ஆகிய செயல்களை விளையாட்டாகச் செய்பவன் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள. பரம்பொருளை வழிபடுதல் ஆருயிர்களின் கடமையாகும். பரம்பொருளை எப்படி வழிபட வேண்டும் என்பதை அருளாளர்கள் காட்டிப் போயுள்ளனர். பரம்பொருளை வழிபடும் முறைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மனிதன் இறைவனை வணங்கும் முறை**

கை ஒன்றுக்கு அழகு உண்டாவது அதில் அணியப் பெறும் ஆபரணங்களை பொறுத்தன்று. எவருடைய கையையும் அணிகளைப் பூட்டி அலங்கரித்து விடலாம். ஆனால் நற்செயல்கள் புரிந்து கொண்டிருக்கும் கையே அழகிய கையாகின்றது. நற்செயல்களிலெல்லாம் சிறந்தது ஆண்டவனை ஆராதிப்பது. இறைவனைப் போற்றுதற்கு பல வழிகள் உள்ளன. அவற்றின் வழியாக மனத்தை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். நல்ல மனத்திற்குக் குறியீடாக அமைந்திருப்பது மலர். அதனிடத்துப் புதுமையும், எழிலும், மணமும் திரிந்து கொண்டிருக்கும். மலர் போன்றிருத்தல் அவசியம். அத்தகைய மனத்தை ஆண்டவனிடத்து ஒப்படைத்து அதற்கு அறிகுறியாகக் கையால் வழிபடும் ஒருவர் மலரை எடுத்து இறைவன் மீது தூவுகின்றார்.



ISBN 978-81-930475-0-7
9 788193 047507

விலை: ₹ 500

தமிழ் இலக்கியங்களில் குடும்பம்

# தமிழ் இலக்கியங்களில் குடும்பம்



பதிப்பாசிரியர்கள்
அ. பொன்னுசாமி
க. முரளிதரன்
அ. திலிப் ஏங்கல்ஸ்
சு. செந்தமிழ் செழியன்
பி. அனிதா

தமிழ்த்துறை ஆய்வாளர் மன்றம்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு, வேலூர்-632 115

## உள்ளடக்கம்


1. சுட்டிவிகடனில் குடும்பம் - வி.அநுசுயா 15

2. நபிஅவதாரப்படலம் காட்டும் குடும்பம் -

3. முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி 20

4. கலித்தொகை காட்டும் குடும்பம் - க. அன்புக்கோகிலா 25

5. சங்க இலக்கியம் காட்டும் குடும்ப நெறிகள் - ஏ. அனிதா 30

6. புறநானூற்றின் வழி கல்வி நோக்கில் குடும்பம் - பி.அனிதா 36

7. சங்க காலப் பாணர்களின் உறவுநிலை - ப.ஆனந்தகுமார் 42

8. இளையான்குடி மாறநாயனார் போற்றிய இல்லறக் கடமை - ஜெ.இந்திரகுமாரி 49

9. பண்பாட்டு நோக்கில் குடும்பம் - மு.இரமேஷ். 54

10. ஜவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களின் குடும்ப அமைப்பு - பொ. இரவீந்திரன் 59

11. புறநானூறு -குடும்ப உறவில் கைம்மை பெண்களின் மரபார்ந்த வாழ்க்கை நிலை - முனைவர் ம.செந்தில்குமார், ல.கு.க. இராஜ்குமார் 65

12. குறுந்தொகை காட்டும் குடும்பம் - ச.இலக்குமிபதி, 70

13. நற்றிணையில் இயற்கையோடு இயைந்த குடும்பம் - அ. உமா மகேஸ்வரி 75

14. சிவப்பிரகாசசுவாமிகள் வாழ்வியல் குடும்பம் - சு. கணேசன் 81

15. நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் பண்பாடு - ப.கமலா 86

16. இல்லற நெறிகாத்த புனிதவதி - முனைவர். கே.ஆர்.கமலாமுருகன் 92

56. அகநாநூற்று வழி நெய்தல் நில மக்கள் வாழ்வியல் - முனைவர் இரா. தர்மராஜ் 281
57. சங்க இலக்கியங்களில் தோழியின் பண்புநலன்கள் - முனைவர் கோ.பா. தாட்சாயிணி 285
58. பண்பாட்டு நோக்கில் பள்ளு இலக்கியத்தில் குடும்பம் - க.திலகவதி 289
59. புறநானூற்றில் கணவனை இழந்த மகளிர் - அ.திலிப் ஏங்கல்ஸ் 294
60. கவிஞர் மேத்தாவின் கவிதைகளில் குடும்ப உறவுகள் - சு. தீபா 299
61. பண்பாட்டு நோக்கில் குடும்பம் - க. தீபனா 304
62. நீதி இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் - ம.துளசி 308
63. அறநூல்கள் கூறும் குடும்பத்தின் மேன்மைகள் - ச. நந்தினி 314
64. பெரியபுராணத்தில் குடும்பம் - திருமதி தே.பத்மாவதி 319
65. கலித்தொகைக் காட்டும் குடும்ப உறவுமுறைகள் - சே. பானுரேகா 324
66. குறுந்தொகையில் குடும்ப வாழ்க்கை - ஜெ.பிரவீனா 329
67. சங்க இலக்கியங்களில் குடும்ப அமைப்பு - ச.பிரேமகுமாரி 334
68. தொல்லியல் சான்றுகள் வழி அகநானூற்று மக்கள் வாழ்வியல் - முனைவர் ஆ.பூபாலன் 339
69. குறுந்தொகை காட்டும் குடும்பம் - மு. பொன்னி சிவக்குமார் 344
70. நாட்டுப்புற பாடலில் குடும்ப மன நிலை - அ. பொன்னுசாமி 348
71. விவிலியத்தில் குடும்பம் - அ. மகாலட்சுமி 353
72. நான்மணிக்கடிகை உணர்த்தும் குடும்ப வாழ்வியல் - செ. மகாலட்சுமி 358
73. இலக்கியங்களில் சமூக நோக்கில் குடும்பம் - ச. மணிமேகலை 364
74. புறநானூற்றில் அரசியல் நோக்கில் குடும்பம் - சா. மில்டன் சாம்ராஜ் 369
75. புறநானூற்றில் இல்லறமேம்பாட்டுச் சிந்தனைகள் - அ.மீனா 375
76. சங்கத் தமிழரின் குடும்ப அமைப்பும் உறவுமுறைகளும் - பேரா.ப.மீனாட்சி 380
77. குடும்ப உறவுமுறையின் கட்டமைப்பு - பு.முத்துகிருஷ்ணன் 385
78. சங்க இலக்கியங்கள் காட்டும் நானிலக்குடும்பம் - முனைவர் ம.செந்தில்குமார், க.முரளிதரன் 390
79. அகநானூறு காட்டும் குடும்பம் - முனைவர் மு.முஜீபுர்ரகுமான் 395
80. பண்பாட்டு நோக்கில் பரிபாடலில் குடும்பம் - ஜெ. மேனகா 400
81. கண்மணி குணசேகரன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் - ர.மோகன்ராஜ், முனைவர் ம. செந்தில்குமார் 405
82. திருக்குறளில் குடும்ப வாழ்வியல் - மா.மோகனசுந்தரம் 411
83. சங்க இலக்கியங்களில் உறவுகள்-பன்முகப்பார்வை - முனைவர் ஏ.யோகசித்ரா 415
84. அற இலக்கியங்கள் அறிவுறுத்தும் வாழ்வியல் நெறிகள் - முனைவர் ம.செந்தில்குமார், ப.ராககதா 420
85. கல்வி நோக்கில் குடும்பம் - ப. ராஜசேகர் 425
86. பண்பாட்டு நோக்கில் குடும்பம் - கோ.ராஜா 430
87. திருவள்ளுவர் உணர்த்தும் குடும்ப நெறி - முனைவர் திருமதி மு.ராஜஸ்ரீ 435
88. வெ.இறையன்பின் ஆத்தங்கரை ஓரம் நாவலில் குடும்ப உறவுகள் - முனைவர் பா.ரேணுகாதேவி 439
89. பாவேந்தரின் - இருண்டவீடு கல்விநோக்கில் குடும்பம் - ச.லாவண்யா 444
90. அரசியல் நோக்கில் குடும்பம் புறநானூறு காட்டும் அரசியல் நெறிகள் - ம.வித்யாமதி 449
91. தமிழக மகளிர்-கல்வி நோக்கில் குடும்பம் - கோ.விஜயகுமாரி 455
92. சிந்தாமணி இதழில் குடும்ப மதிப்புகள் - இரா.விஜயலட்சுமி 460

# சங்க இலக்கியங்கள் காட்டும் நானிலக்குடும்பம்

**முனைவர் ம.செந்தில்குமார்**
இணைப் பேராசிரியர்

**க.முரளிதரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
சேர்க்காடு, வேலூர்.

பசியும் பாலுணர்வும் எல்லா உயிரிகளுக்கும் பொதுவானவை. மனிதன் மட்டுமே அவ்வுணர்வுகளை நெறிப்படுத்தி வாழத் தெரிந்திருப்பதுடன் தன்வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டும் தடயங்களை வைத்துச் செல்கிறான். மொழியின் அடிப்படையில் தோன்றும் கலை இலக்கியங்களும் அவன் வாழ்வின் வளர்ச்சியைத் தெளிவுப்படுத்திக் கொண்டிருக்கும் சாதனங்களாகும். இச்சாதனங்கள் சமூக நிறுவனங்களின் வளர்ச்சி நிலைகளைப் புலப் படுத்துகின்றன. இவ்வடிப்படையிலே குடும்பம் பற்றிய விளக்கமும் தரப்பெறுகிறது. குடும்பமே அடிப்படைச் சமூக அலகாகும்.

### தமிழ்க்கலைக்களஞ்சியம்

குடும்பம் எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு. குடும்பத்தினின்று வரவு ஏற்படுகிறது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிப்படையானது. இக்குடும்பம் சமூகவழக்காலும் சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறது.

திருமண அடிப்படையில் உருவாகும் ஓர் உயிரினக் குழுவே குடும்பம் ஆகும். இக்குடும்பம் மக்கட்பேற்றின் மூலம் விரிவடைகிறது. உறவுமுறையால் தொடர்பை தெளிவுப்படுத்துகிறது, பண்பாட்டு அமைப்பைக்காத்து வருகிறது.

### குடும்பம்

குடும்பம், சமூகத்துடன் உருவநிலையில் மக்கள் குழுவாகவும், அருவ நிலையில் மக்கள் வாழ்வாகவும் இணைந்து இயங்கும் நிறுவனமாகும். மணமான கணவன் மனைவி இருவரும் தம் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்தலே குடும்பம் எனப் பொதுவாக கொள்ளப்பெறுகிறது. தமிழ் இலக்கியத்தில் 'குடும்பம்' என்ற சொல்லை முதன் முதலில் கையாள்கின்றவர் திருவள்ளுவரே (குறள்.1029) ஆவார். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் குடும்பம் என்ற சொல் இடம்பெறவில்லை. மனை, இல், இல்லம், குடி ஆகிய சொற்களே குடும்பம் என்ற பொருள் தருவதாகக்கூற முடிகிறது.

### குடும்பத்தின் அடிப்படை

சமூகத்திற்குக் குடும்பம் அடிப்படையாய் அமைகிறது. குடும்பத்திற்கு காதல் அடிப்படையாகிறது. காதலின் தொடர்ச்சியாகக் குழந்தைகளும், குடும்பமும் அமைகின்றன. குடும்பம் என்னும் அமைப்பு களவு, உடன்போக்கு, திருமணம் போன்ற சொல்களின் மூலம் அமைவதைச் சங்க இலக்கியங்கள் தனித்தனியாகக் கூறுகின்றன. தொல்காப்பியம் அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் தருகிறது. சங்க இலக்கியத்தில் தினைப்புனங்காத்தல், கடல்நீராடல், சோலையில் தங்கல், சிற்றில் இழைத்து விளையாடல், குரவைக்கூத்தாடல் போன்ற நிகழ்ச்சிகள் களவுக்குக்காரணமாகிறது.

### குடும்பங்களின் வாழ்விடம்

குடிகளாகிய குடும்பங்கள் இல்லத்தில் வாழும். இல்லங்கள் பல சேர்ந்து ஊர். ஊர்பல சேர்ந்து நாடு இவ்வளர்ச்சி நிலையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"இரவுக்குறியே இல்லகத்துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே
மனையகம் புகாக் காலையான" (தொல்.பொருள்.129)

எனத்தொல்காப்பியம் இல்லகம், மனையகம் இரண்டையும் குறிக்கிறது. சங்ககாலத்தில் இல், மனை, நகர், முன்றில், முற்றம், குரம்பை, வரைப்பு, மாடம், குடில், கூரை ஆகிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன. சிறுகுடி முன்றில் (குறுந்.228),புலவுமணல் முன்றில் (நற்.239), புதல்போல் குரம்பை (அகம்.315), புல்வேய்குரம்பை (அகம்.87) இலைவேய் குரம்பை (மதுரைக்.310) ஏழ்மையான மனை முதல்

விண்தோய் மாடம் வரை பல்வேறு வகையான வாழி... செல்வநிலைக்கு ஏற்ப அமைந்திருந்த நிலையை அறியமுடி...

### குடும்பத்தின் அங்கத்தினர்

தோழி, செவிலி இவர்கள் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புகள் எனச் சங்க இலக்கியங்களில் மிகுதியாக அறியப்பெறுகிறது. தாய், தந்தை, மகன், மகள் இவர்கள் குடும்ப அடிப்படை உறுப்பினர்களாவர். இவர்கள் இரத்த உறவுமுறையைக் கொண்டவர்கள். பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி இவர்கள் களவுக்காலத்திலும், பாணன், கூத்தன், விறலி, பரத்தை கற்புக்காலத்திலும் குடும்பத்தோடு உறவுள்ளவர்...

### குடிப்பெயர்கள்

குடிப்பெயர்கள் குடும்பத்தன் அடிப்படையில் தோன்றின.

"நாடும் ஊரும் இல்லுங் குடியும்" (தொல்.சொல்.சேனா 16...)

என்பதின் வாயிலாக அறியமுடிகிறது. குடி, இல், ஊர், ... என்ற படிநிலை வளர்ச்சியில் நிலத்தலைமை பெறுவத... வகையில் குடிப்பெயர்கள் உயர்ந்திருக்கலாம். நிலப்பெயர், குடிப்பெயர், வினைப்பெயர், உடைப்பெயர், பண்புகொள்பெயர், முறைநிலைப்பெயர், சினைநிலைப்பெயர், திணைநிலைப்பெயர், ஆடியற்பெயர், எண்ணியர்பெயர் போன்றன குடும்பத்தினி... கிளைத்து வளர்ந்த கிளைப்பெயர்களென்று சேனாவரையர் குறிப்பிடுகிறார். (தொல்.சொல்.165)

### சங்ககால குடும்பநிலை

ஒவ்வொரு கால வளர்ச்சியிலும் மனிதன் பெறும் அனுபவ அறிவானது தொடர்ந்து கொண்டே செல்லும். இது அவனது தேவையின்போது மாற்றம் பெறும் தன்மையினை உடையது. சங்கப்பாடல்களில் இயற்கைப்பொருட்களைப் பயன்படுத்தல், கால்நடைகளை வளர்த்தல், பல்வேறு கனிமவளங்களை கையாளுதல் போன்ற நிலைகளை காணமுடிகிறது. இவையனைத்தும் அவர்களின் குடும்ப வாழ்க்கையுடனே தொடர்பு கொண்டு பின்னிப் பிணைந்தவைகளாகும்.

### குடும்பம் தொடக்கநிலை

வேட்டைத் தொழிலும் உழவுத்தொழிலும் குறிஞ்சி நிலத்தில் காணப்படும். விலங்குகளுடன் போராடி வாழ்ந்த குறிஞ்சி நிலக்குடும்ப வாழ்க்கையானது மனிதனுக்கும் விலங்குகளுக்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்தியது. விலங்குகளின் இயல்புகளை உற்று நோக்க வாய்ப்பு கிடைத்தது. இதன்மூலம் அவற்றினைத் தம் தொழிலுக்கு உதவுமாறு பழக்கிக் கொண்டான். அவைகளை குடும்ப அங்கமாக்கிக் கொண்டான். தினைப்புனம் காக்க...



... தலைவி அங்கு தலைவனை சந்திப்பதும், அருவியில் ...போது அவனை சந்திப்பதும் எனக் குறிஞ்சி நிலக் குடும்ப ... தொடங்குகிறது.

"...கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்பை நல்கியோர்" (புறம்.163)

...புறநானூற்றுப் பாடலில் கடும்பு சுற்றம் எனும் பொருளில் ...ளது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் கடும்பு ... சொல்லுக்கு மூலம் தரப்படாமல் இதை குடும்பம் என்ற ...டன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது என்கிறது.

### ...பிள்ளைப்பேறு

ஆண்வழிச் சமுதாய அமைப்பை முன்னிறுத்தப்படும் ...லே இலக்கியத்தில் பதிவாகியுள்ளது. பலப்பாடல்களில் ...பிள்ளைப்பேறுகள் பேசப்பட்டுள்ளது. "புறவணிநாடன் ...வன் தாயே" (ஐங்.405) "புதல்வன் நாய்அவன் புறம்கவைஇ ..." (குறு.359) "புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை" (நற்.355) ...வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற புதல்வன்" (கலி.75:24 ...) "...புகழ்சால் புதல்வன் பிறந்த பின்வா" (புறம்.222) என்று ...வனை முன்னிறுத்தியே பொத்தியாரிடம் கோப்பெருஞ் ...ன் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

### முல்லைத்திணைசார் குடும்பம்

...டு நிலப்பகுதியில் கார்கால மழையினால் செழிக்கும் ...வெளியையும் அதை அடிப்படையாகக் கொண்ட கால்நடை ...பையும் உள்ளடக்கியது. கால்நடை வளர்க்கும் ...கள் தனியாகப் பிரிந்துதான் சமுதாய அடிப்படையில் ... முதல் மாபெரும் வேலைப்பிரிவினையாகும் என ...க் ஏங்கல்ஸ் குறிப்பிட்டுள்ளதை நினைவுக்கூறமுடிகிறது. ...லைநில குடும்பத்திலுள்ள அனைவருக்கும் ஒவ்வொரு பணி ...ம். தந்தை காட்டில் வேலை செய்வான், தமையன்மார் ...டைகளை மேய்ப்பர். மகள் தினைக்காவலில் மேயவிட்ட ...களைப் பார்த்துக் கொள்வாள். தாய் வீட்டுப்பணியில் ...டிருப்பாள். முல்லை நிலமக்கள் முள்ளுடைய பயிர் ...விட்ட நிலத்தில் இருக்கும் வரகு, வைக்கோலால் வேயப்பட்ட ...னை உடையவர்களாவர். இன்றும் சிற்றூர்களில் இத்தகைய ...நிலையில் அமைந்த குடும்பங்களைக் காணலாம். குறிஞ்சி ...யில் தொடங்கிய வேட்டைத் தொழில் முல்லையிலும் ...கிறது. இவ்வாழ்வு தொடக்கநிலை வாழ்வாகும்.

### மருதத்திணைசார் குடும்பம்

வளமிக்க நிலத்தை பண்படுத்தி நீர்வளத்துடன் உழவைச் ...யாகச் செய்யும் வாழ்வே மருதநில வாழ்க்கை. உழவின்

முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மேலும் விவசாயம் செய்தும் உணவுப் பொருட்களை உண்கின்றனர். இவர்கள் காலை வேளையில் கூழ் அல்லது கஞ்சி உணவாக உட்கொள்கின்றனர். கூழுவுடன் இரவுச் செய்த பலாக்கீரையை கூட்டு உணவாக சேர்த்துக்கொள்கின்றனர். மதிய வேளையில் கிழங்குகள், களி, கஞ்சி, பலாப்பழம் ஆகியவற்றை உண்கின்றனர். இரவு வேளையில் சாதம் செய்து அவற்றுக்கு கூட்டாக பலாக்கீரை, பூசணிக்காய், பண்ணக்கீரை ஆகியவற்றை உண்கின்றனர். மேலும் களிச் செய்து அவற்றுக்கு கூட்டாக பண்ணக்கீரை அல்லது ஏதேனும் ஒருக் கீரையைச் செய்து உணவாக உட்கொள்கின்றனர்.

**முடிவுரை**

ஜவ்வாது மலைவாழ் மலையாளி பழங்குடிகள் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற கட்டமைப்பிற்குள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் குடும்பங்கள் தனிமைப்பட்டு இருந்தாலும், இவர்கள் குழு என்ற கட்டமைப்பிற்குள் காணப்படுகின்றனர். குழு அமைப்பின் மூலம் எந்த ஒரு பொருளாக இருந்தாலும் பங்கிட்டு வாழும் மரபைக் கொண்டுள்ளனர். பங்கீடு செய்வதன் மூலம் அவரவர்கள் தன் குடும்பத்தை குழுவின் மூலம் தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். எனவே இம்மலையில் வாழும் மக்களின் குடும்பங்கள் அவர்களின் சமூகத்துடன் எப்படி ஒன்றியுள்ளது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் பக்கம் 97
2. பெ. மாதவன், சங்க இலக்கியத்தில் குடும்பம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், பக்கம்51
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், பக்கம் 355
4. மேலது பக்கம் 355
5. மேலது பக்கம் 352
6. மேலது பகக்ம் 363
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம், பக்கம் 164.

தகவலாளர்:

1. ரங்கசாமி, வயது 64 நடுவூர், ஜவ்வாது மலை.
2. ராமன் ஊர்க்கவுண்டர், வயது 69, புதூர் நாடு, ஜவ்வாது மலை.
3. நாச்சி, வயது 49, போளூர், ஜவ்வாது மலை.
4. அழகேசன், வயது 52, தகரக்குப்பம், ஜவ்வாது மலை.




# புறநானூறு குடும்ப உறவில் கைம்மை பெண்களின் மரபார்ந்த வாழ்க்கை நிலை


**முனைவர் ம.செந்தில்குமார்**
இணைப்பேராசிரியர்
**ல.கு.சு.இராஜ்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, சேர்க்காடு-632 115


சமூகத்தின் ஆணிவேர் குடும்பமாகும். அக்குடும்பத்தில் ஆண் பெண் திருமணத்தில் உருவாகும் மனம் ஒன்றிய இல்லற வாழ்வே அடிப்படையாகிறது. அவ்வாழ்வில் பெண்ணே முக்கியத்துவம் பெறுகிறாள். கட்டுக்கழுத்தியான பெண்கள் குடும்பத்தை வழி நடத்துகின்றனர். குறைக் கழுத்தியான கைம்மை பெண்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட மரபு சங்ககாலத்தில் இருந்துள்ளது. அவர்களின் மரபார்ந்த வாழ்க்கை நிலைக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குடும்பம்**

குடும்பம் என்பது ஆண் பெண் உறவுகளை வளர்த்து சமூகம் மேம்பாட்டிற்கு அடிப்படையாகிறது. குடும்பம் சமூகத்தின் மிகச் சிறிய விட்டமாக திகழ்கிறது. ஒவ்வொரு குடும்பத்தின் சிறப்பும் சமூகத்தின் சிறப்புக்கு வித்தாக அமைகிறது. குடும்ப வாழ்வில் ஒழுக்கம் குடும்பத்தை வழி நடத்தும் என்றாலும், தனி மனித ஒழுக்கத்திற்கு குடும்பத்தால் செயல் வடிவம் கொடுக்கப்படுகிறது.

குடும்பம் ஒன்று தான் மனிதனின் உயிரியல், உடலியல், உளவியல், வாழ்வியல், அழகியல் சார்ந்த அனைத்து தேவைகளையும் நிறைவு செய்கிறது. சங்க இலக்கியம் குடும்ப அமைப்பைச் சார்ந்ததாகும்.

### அன்றாட உணவு

கைம்மை மகளிர் பிடி யானையின் அடி போன்ற சிறிய இடத்தை மெழுகி, இலையிட்டு அதன்மேல் தருப்பைப் புல்லை வைத்துச் சுவையில்லாத உணவை உண்பர். இதனை வெள்ளெருக்கிலையார்,

**"பிடியடி யன்ன சிறுவழி மெழுகிற்**
**தன்னமர் காதலி புன்மேல் வைத்த**
**இன்சிறு பிண்டம் .................'' புறம்.234:24)**

என்பர். தினமும் பசிய இலையை உணவாகக் கொள்வர். பழைய சோறு, நெய்யில் பொரிக்காத வெள்ளரிக்காய், எள்துவையலுடன் புளி கூட்டிச் செய்யப்பட்ட வெந்த வேளையிலை ஆகியவற்றை உணவாகக் கொள்வர். இதனை,

**"அணில்வரிக் கொடுங்காய் வாய்போழ்ந்த்**
**காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா**
**தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்**
**வெள்ளட் சாந்தொடு புளிப்பெய் தட்ட**
**வேளை வெந்தை வல்சி யாக" (புறம். 246:45)**

என்பர் பெருங்கோப்பெண்டு. இவ்வுணவையும் கைம்மை மகளிர் வேளா வேளைக்கு உண்பதில்லை. எப்பொழுது உண்ணத் தோன்றுகிறதோ அப்பொழுது உண்பர். கைம்மை மகளிர் புல்லரிசியினை உரிய பொழுதில் உண்ணாமல் பொருந்தாப் பொழுதில் உண்பர். இதனை,

**"கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்**
**தின்னா வைக லுண்ணும்**
**அல்லிப் படூஉம் புல்லா யினவே" (புறம்.248:35)**

என்பர் ஒக்கூர் மாசாத்தியார்.

### நூல் நூற்றல்

கைம்மை பெண்கள் பஞ்சில் நூல் நூற்றலை நடைமுறையாகக் கொள்வர். விதவிதமான பல வண்ண ஆடைகளை நீக்கி, வெள்ளை நூலாடையை உடுத்தி வாழ்வர். இதனை,

**"பருத்திப் பெண்டிர் சிறுதீ விளக்கத்து" (புறம்.326:5)**

என்பர் பொற்கொல்லனார். மேலும்,

**"ஆளில் பெண்டிர் தாளிற் செய்த**
**நுணங்குநுண் பனுவல் .........." (நற்.353:12)**

என்பர் கபிலர். மேலும்,

**"படுத்திப் பெண்டின் பனுவல்" (புறம்.125:1)**

என பெருஞ்சாத்தனார் கைம்மை மகளிரின் நூல் நூற்றலை பாடியுள்ளார்.



### கற்படுக்கை

கைம்மை மகளிர் கற்படுக்கை அல்லது வெறுந்தரையில் துயில்வர். அதில் விரிப்பு விரித்துக் கொள்வதில்லை. பாயுமின்றிக் கற்றரையில் துயிலுதலை,

**"பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்**
**உயவற் பெண்டிர் ஞ்ஞ்.." (புறம்.246:910)**

பஞ்சு மெத்தையைத் துறந்து சிறிய கற்படுக்கையில் கைம்மை மகளிர் துயிலும் வாழ்வை பெருங்கொப்பெண்டு பாடியுள்ளார்.

### தீப்பாய்தல்

கணவனை இழந்த பெண்டிர் கைம்மை நோன்பை மேற்கொள்ளாத சூழலில் தீப்பாய்ந்து உயிரை விடுவதும் சங்ககால மரபாக இருந்துள்ளது. இதுவும் அரசமரபினரிடம் இருந்ததைப் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்கையில் பாடியதாக இடம்பெற்றுள்ள புறநானூற்றுப் பாடல் 246 இல் கூறப்பட்டுள்ளது. மேலும், புலவர்களுக்கு குறைவின்றி கொடுக்கும் இயல்புடைய ஆய் அண்டிரன் தன் உரிமையுடைய மகளிருடன் தேவர் உலகம் அடைந்தான் என்பதனை,

**"பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்**
**கோடு ஏந்து அல்குல் குறுந்தொடி மகளிரொடு**
**காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப" (புறம்.240:36)**

என்னும் பாடலில் கீரனார் பாடியுள்ளார். இதில் கணவனுடன் மனைவி தீப்பாய்ந்து உயிர்விட்ட மரபு புலனாகிறது.

### முடிவுரை

இல்லறம் என்னும் நல்லறம் காக்கும் பெண், குடும்ப வாழ்வில் கணவனுடன் இணைந்து வாழ்வதால்தான் அப்பெண்ணிற்கு சமூகத்தில் மதிப்பு, மரியாதை, கௌரவம் போன்றவற்றை வழங்குகிறது. கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ்கின்றனர். சமூகத்தில் நடைப்பெறும் சுப நிகழ்ச்சிகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்டு அவர்களுக்கென சில மரபார்ந்த வாழ்வியல் முறைகளை சமூகம் விதித்துள்ளது. அவற்றைப் பற்றி மேலே இக்கட்டுரையில் விரிவாகப் பார்த்தோம்.

## முடிவுரை

உலக அளவில் தமிழரின் தொன்மையும், வரலாறும் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் என்பன முன்னோடியானதாகவும், பலருக்கும் வழிகாட்டக்கூடியதாகவும் அமைந்துள்ளன. மனிதன் சமுதாயமாகக் கூடி வாழத் தொடங்கிய காலம் முதல் அவர்களின் மூதாதையர்களின் பண்பாடும், கலாச்சாரமும் கடைபிடிக்கப்படுகின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்வியரான தமிழர்கள் குழுக்களாகவும் இனக்குழுக்கலாகவும் பிறகு இனச்சமுகமாகவும் வாழ்ந்தனர். அதன்பின்னர் குடும்பம் என்ற கட்டமைப்பில் வாழ்ந்தனர் அவர்களுடைய உயர்ந்த பண்பாடு உலகநாடுகளின் பண்பாடு, கலாச்சாரத்தோடு ஒப்பிடும்போது குன்றின்மேலிட்ட விளக்காகத் தெற்றென விளங்கும்.

### பார்வை நூல்கள்


1) பரிபாடல் – இரா.சாரங்கபாணி.

2) கலித்தொகை – பாரத்துவாசி நச்சினார்க்கினியர் மதுரை.




# கண்மணி குணசேகரன் சிறுகதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்


**ர.மோகன்ராஜ்**

முனைவர் பட்ட ஆய்வாளர்,

**முனைவர் ம. செந்தில்குமார்**

இணைப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

சேர்க்காடு, வேலூர்.


## முன்னுரை

வாழ்வு என்பது முள்ளும், மலரும் போன்றது. வாழ்க்கையில் எதார்த்தமாக நிகழும் வாழ்வியல் நிகழ்வுகளை மையமாக வைத்து கண்மணி குணசேகரன் சிறுகதைகள் அமைந்துள்ளன. வாழ்க்கையில் நிகழும் போராட்டம், பெண்;களின் அவலநிலை, வட்டார மக்களின் பேச்சு, நம்பிக்கை, வறுமை ஆகியவை இவரது சிறுகதைகளின் ஒரு சிறப்பம்சமாக அமைந்துள்ளது. மனிதர்களின் பண்புகள் அவர்கள் வாழும் வட்டாரங்களைப் பொறுத்தே அமைகிறது. வட்டாரத்திற்கு உரிய சிறப்புத் தன்மைகளை எடுத்துரைக்கும் எழுத்தாளன் இலக்கிய உலகில் தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறான். அந்தப் பெருமை இவரையேச் சாரும். இந்தளவிற்கு சிறப்பு வாய்ந்த கண்மணி குணசேகரன் 'உயிர்த்தண்ணீர்;' சிறுகதை தொகுப்பில் உள்ள வாழ்வியல் சிந்தனைகளை வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

## தாய்மையின் யதார்த்தம்

உலகத்தில் மிகவும் போற்றுதற்குரிய பண்பு தாய்மைப் பண்பாகும் அதற்குக் கைம்மாறு என்பது எதுவும் கிடையாது.

அப்படிப்பட்ட தாய்மையின் எதார்த்த நிலையை ஆசிரியர் தம் சிறுகதையில் சிறப்பாகச் சித்தரித்துள்ளார்.

'குருதிச்சுவடு' என்ற கதையில் மாதவிடாய் நாட்களில் ஒரு முறை மின்னல் வெட்டை அருகில் பார்த்து பயந்ததில் இருந்து குமாரிக்கு அந்த நாட்களில் தாங்க முடியாத வலி ஏற்பட ஆரம்பித்துவிட்டது. மாதவிடாய் நாட்கள் நெருங்கும் பொழுது அவளுக்கு மனதில் பதைப்பு தொற்றிக் கொள்ளும். வலி ஒருபுறம்,; அதை குணப்படுத்தவோ, குறைக்கவோ மருத்துவம் பார்க்க இயலாத குடும்பநிலை மறுபுறம் என்ற நிலையில் அந்த நாட்களை இயலாமையுடன் சந்தித்தே ஆக வேண்டும் என்பதுதான் குமாரியின் முன் இருக்கும் ஒரேவழி. மூன்று பெண்பிள்ளைகள் உள்ள அந்த வீட்டில் அம்மா எப்போதும் சிடுசிடுப்புடன்தான் இருப்பாள். அப்பா நலம் விசாரிப்பதை மீறி எதுவும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார். ஆனால் குமாரிக்கு தாண்டி செல்லவேண்டிய நாட்கள் அவை. ஒருநிலையில் இதற்கு என்னதான் தீர்வு என்ற கேள்விக்கு அம்மா கல்யாணம் ஆகி மூனு மாசத்துல இந்த பிரச்சனை வராது என தீர்வு சொல்கிறாள். இதில் மோசமானவர்கள் இல்லை. ஆனால் அன்றைய நிலையில் தாயாக அவளால் அதை தாண்டி எதுவும் செய்ய இயலாது என்பதுதான் யதார்த்தம். என்று ஆசிரியர் தாய்மையின் எதார்த்தத்தை மிக அழகாக குறிப்பிட்டுள்ளார். என்பதனை,

**"இடுப்புல கத்தியை வெட்னமாதிரி வலி எடுத்தது**
**மண்ணெண்ண நனச்ச குச்சியில ஓடி நெருப்புப்**
**பதற மாதிரி வலி மலமன்னு ஒடம்பு பூரா பரவி**
**குத்தலுக்கு ஆரம்பிச்சுப் போச்சி"**

போன்றவரிகள் மூலம் அறியமுடிகிறது.

**பெண்கள்**

சமூகம் மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் கணக்கில் அடங்காதவை. இவரது சிறுகதைகள் அனைத்தும் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளை மையமிட்டே அமைகின்றன. பெண்களின் பிறப்பில் எந்த அளவிற்குச் சிறப்பும், பெருமையும் உள்ளதோ அந்த அளவிற்கு அவர்களது வாழ்க்கை சிக்கல்களும், போராட்டங்களும் நிறைந்ததாய் உள்ளது.

'சுருக்கு' என்கிற சிறுகதையில் முத்துலட்சுமி என்ற குடும்பத் தலைவி படும்பாட்டினை ராத்திரி ஆட்டுக்காரன் மத்தக்கழியால அடிச்சதை,

**"சுருக்குன்னு நெருப்பால சுட்ட மாதிரி உசுரே பூட்டுது**
**அப்பிடியே படத்துல அடிபட்ட பாம்பு மாதிரி பட்டுன்னு**



**ஒக்காந்துட்டா கொள்ளிக்கட்டையில் இருக்கற நெருப்பு**
**காத்துக்கு தக்கபடி அல அலயா கருப்பு நெறம் பாயற**
**மாதிரி வலி சுருக்சுருக்குன்னு குத்துது"**

இதன்மூலம் பெண்களின் அவலநிலையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**தொழிலாளர்களின் நம்பிக்கை**

பருவ மழை, கோடை மழை என இயற்கை தேவதையின் வரத்தினால் முப்போகமும் மழைபெய்யும். இந்த மழையின் அழகினை அவருக்கே உரித்தான பாணியில் இரசிக்கும் படியாக எழுதியுள்ளார் ஆசிரியர்.

**"நெல்லா இருந்த மானம் தூறல் போட ஆரம்பிச்சிது**
**கோட மழ குறியக் காட்டிட்டுது. அப்பிடியே மானம்**
**இடிஞ்சி விழுந்த மாதிரி பக்கத்துத் தோப்புல**
**ஒருமுந்திரிக்கு மேல நெருப்பா எறங்குது".**

என மழையை வர்ணித்துள்ளார். இதில் மழை எந்தெந்த காலக்கட்டத்தில் எப்படி மழைபெய்யும், கோடை மழையின் தாக்கத்தில் மின்னலும், இடியும் எப்படி வரும் என்பதையும், வெறுமனே மழை என நினைக்கத் தோன்றாமல் அதனை உணர்வுப் பூர்வமாகவும் விவரித்துள்ளார். மழைபெய்தால் பூமி செழிக்கும் தொழில்கள் சிறப்பாக நடைபெறும் இதனால் முந்திரிக்காட்டில் வாழ்கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை சிறப்படையும், இவ்வாறு மழை தொழிலாளர்களின் உற்ற தோழனாக மட்டுமல்லாமல் ஓர் நம்பிக்கைக்குரியவனாகவும் திகழ்கின்றான் என ஆசிரியர் கூறும் பாங்கு பாராட்டுக்குரியது.

**பழங்கால வைத்தியமுறை**

கிராமப்புறத்து மக்கள் பட்டணத்து டாக்டரை நம்புவதைவிட உள்ளூர் வைத்தியரே நம்புவர் என்பதை 'குருதிச்சுவடு'கதையின் வாயிலாக விளக்கியுள்ளார்.

வயிறு வலிக்குது என்று சொன்ன செல்வியை டாக்டரிடம் கூட்டிச் செல்லாமல் நாட்டு வைத்தியத்தை ஒவ்வொருவரிடமும் கேட்டு அவர்கள் சொல்வதையே சிகிச்சை முறையென ஆரம்பித்து செய்து வந்தார்கள் என்பதை,

**"பச்சைத் தண்ணில குளிக்காத. வெந்நீருபோட்டுக் குளி**
**எல்லாம் சரியாப் பூடும். வேர புடுங்கியாந்து**
**நல்லெண்ணையில் அரச்சிக்குடி"**

இதுபோன்ற இயற்கை மூலிகை வைத்திய முறையை வாழ்க்கையோடு இணைத்துக் கூறியுள்ளார்.

'குருதிச்சுவடு'; என்னும் இச்சிறுகதை வறுமையும் முன்னேற்றமும் இல்லாத ஒரு கிராமத்து மக்களின் வாழ்வியல் எதார்த்தத்தைப் படம் பிடிக்கிறது. இக்கதையில் வரும் பெற்றோருக்கு அடுத்தடுத்து மூன்று பெண் குழந்தைகள் காட்டில் விறகு பொறுக்கி அதிலிருந்து வரும் பணத்தை வைத்துதான் குடும்பத்தை நடத்த வேண்டி சூழல் எவ்வளவுதான் வறுமை வாட்டி எடுத்தாலும் தன் பிள்ளைகளை எப்படியாவது கரை சேர்க்க அவர்கள் படும் பாட்டினை ஆசிரியர் திறம்பட உணர்த்தியுள்ளார்.

'குலைவு' என்னும் சிறுகதை ஆண்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இழவு வீட்டில் மோளம் அடிக்கும் சின்ன குண்டு, பன்றி வளர்க்கும் செல்வராசு, மருமகள் சேமிப்பை திருடி விற்று வெத்தலை வாங்கி குதப்பும் கலியன், காசிற்காக சுடுகாட்டில் கொடும்பாவிக்கு காவல் இருக்கும் குப்பன் போன்ற கதை மாந்தர்களை குறித்த கதைகள் அவை: சாதி, வர்க்க அடுக்கில் கீழே இருந்தாலும், வறுமையின் நிழலிலேயே காலத்தைக் கடத்தினாலும் அந்த மனிதர்கள் தங்களுடைய தன்மானத்தை இழப்பதில்லை. முந்திரிக்காடுகளை வெளிக்காட்டாமல் வாழ்க்கையோடு எதிர்நீச்சல் போட்டு நீந்தி வரும் கதையை கண்மணி குணசேகரன் சிறுகதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

'சுருக்கு' என்னும் சிறுகதையில் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை உணர்த்துகிறார். ஒரு காய்கறி சந்தையில் ஒரு பொருளை வாங்கும் போது விலையைக் கேட்காமலேயே சொன்ன விலையை அப்படியே கொடுத்து பொருளை வாங்கிச் செல்லும் பட்டணத்து மனிதர்களைப் பற்றி,

**"சந்தைக்கு வர்றவ எவ வெல கேட்டு வாங்கறா?**
**விக்குறவன் வெலயச் சொல்லி வாய மூடறதங்காட்டியும்**
**சர்புர்னு ஜிகினா மணிபார்சத் தொறந்து எடுத்துக் குடுத்துட்டு**
**அள்ளிக்கிட்டு போய்டுறாளுவோ"**

எனக் கூறுகிறார். அதே வேளையில் முந்திரிக் காட்டு மக்களின் வறுமையையும் தெளிவாகக் கூறுகிறார். "முந்திரிக் காட்ல சுத்தி, அவன் இவனுக்குப் பயந்து வெறவு ஒடிச்சி, தல சொமையாக் கொண்டாந்து, இவுளுவுகிட்டியே குடுத்துட்டு, கால அர குடுக்கறதக் கொண்டாந்து, இங்க எதனாச்சும் அழுவதை, நொறுங்குனதை வாங்க வந்தா, ஆன வெல குதுர வெலதான். மீறிக் கொறச்சிக் குடுன்னா,"போ அந்தாண்ட வாங்குற மூஞ்சியப் பாத்தா தெரியாதா?" ன்னு மூஞ்சியில குத்தற மாதிரி பேசறானுவோ என்னாத்தப் பண்றது"என வறுமையின்; புலம்பலைக் கூறுகிறார்.



வறுமையின் கொடுமையை அனுபவிக்கும் மனிதர்கள் மனம் வெறுப்பான நிலையில் "காசக் கண்டா கண்ணுல ஒத்திக்கலாங்கற மாதிரி தெரியுது" என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் வறுமையிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்கும் மனநிலை மக்களிடையே காணப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஆண்களின் மனநிலை**

'சுருக்கு' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள சிறுகதையில் கணவனிடம் அடிவாங்கிய மனைவியின் வலியை இயல்பாக

**"படத்துல அடிபட்ட பாம்பு மாதிரி பட்டுன்னு ஒக்காந்துட்ட**
**கொள்ளிக் கட்டையில இருக்கற நெருப்பு காத்துக்கு**
**தக்கபடி அல அலயா கருப்பு நெறம் பாயற மாதிரி வலி"**

என கூறுகிறார். பெண்கள் எவ்வளவு தான் உடலை வருத்தி உழைத்து குடும்பத்தை நடத்தினாலும் குடும்பத்தில் கணவனால் அவள் நடத்தப்படும் விதம் பற்றி இச்சிறுகதையில் கூறியுள்ளார். சமுதாயத்தில் உள்ளவர்கள் எல்லாம் மனைவியின் நடத்தையைப் பற்றி தப்பும் தவறுமாகப் பேசுவதை அப்படியே உண்மையென நம்பி அவளை அடித்து சித்ரவதை செய்யும் ஆணின் கொடூரத் தன்மையை படம்பிடித்துக் காட்டுகிறது 'சுருக்கு' என்னும் சிறுகதை.

'முத்துலட்சுமி' என்ற கதாபாத்திரம் எப்படியெல்லாம் ஆணுக்கு நிகராக உழைக்கின்றாள் என்பதை தம் வரிகளில,;

**"சின்ன வயசிலேர்ந்து வெறவு வெட்டி, முந்திரிக்கொட்ட**
**பொறுக்கு, சருவடிச்சி, சீவு அறுத்து ரொம்பப்**
**பழக்கமாப் போச்சி. முந்திரிக் கொட்டலாம்**
**அவ கூட யாராலயும் பொறுக்க முடியாது**
**மத்த சனம் அஞ்சி கிலோ பொறுக்கனா இவ**
**பத்துகிலோ தான் உச்சிவெயில்ல கொஞ்ச**
**நேரம் பொறுக்கனாலும் கண்ணு நீலம் பூத்துடும்.**
**மின்னால இருக்கற கொட்டையக் கூடப் பொறுக்காம**
**வுட்டுட்டுப் பூடும். எனக் கூறுகிறார்.**
**வெறுவு வெட்றப்பியும் கண்ணுல மண்ணத் தூவிட்டு**
**எவ்வளவு பெரிய கெளையையும், மறுக்குன்னு முறிச்சித்**
**தூக்கிக்கிட்டு வந்துடுவா. அதனாலயே எல்லா**
**சனமும் இவள "காட்டுப்பக்கான், காட்டுப்பக்கான்"னு**
**பண்ணும்.**

இப்படிப்பட்ட உழைப்பு மிக்க பெண்ணை எவ்வாறு மனம் கஷ்டப்பட வைக்கிறார்கள் என்பதனை இதன்மூலம் அறிய முடிகிறது.

# அற இலக்கியங்கள் அறிவுறுத்தும் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் ம.செந்தில்குமார்**
இணைப்பேராசிரியர்

**ப.ராகசுதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு

**முன்னுரை**

தமிழ்த் தொன்மைச் சிறப்பும், இலக்கிய வளமும் அறநெறிகளும் இனிமைப் பண்பும் வாய்ந்த மொழி. சங்க இலக்கியத்திற்குப் பிறகு தோன்றிய நீதி நூல்கள் அறக்கருத்துக்களை தெளிவுற எடுத்துரைக்கின்றன. அவற்றில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. அவை சமுதாயத்திற்கு அறநெறிகளை அறிவுறுத்தும் சிறப்பினை உடையன. முல்லைக்குத் தேர்கொடுத்த வள்ளல் பாரியின் செயல் மனிதனின் கடமை உணர்வை சுட்டிக் காட்டுகிறது. எந்த உயிர் துன்புற்றாலும் அதனை வாழ்விக்கச் செய்வது தான் மனித பண்பாடாகும். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று கற்றறிந்தார் ஏத்தும் கலி குறிப்பிடுகின்றது. மக்கள் மனவளம் பெற்றால்தான் வாழ்வும் நெறிப்பாடுடையதாய் அமையும். இதற்கு அற இலக்கியங்கள் துணைபுரிகிறது. இவ்அற இலக்கியங்கள் வாழ்வினை நெறிப்படுத்தி வளமார்ந்த நன்னிலைக்கு நம்மை அழைத்துச் செல்வதாகும்.

**தனிமனித வாழ்வில்**

வள்ளுவப் பெருந்தகைக்கு உலகம் தழுவிய பரந்த பார்வை இருப்பினும் ஒருநாடு அல்லது தேசியத்தைச் சார்ந்தே மக்கள்



வாழவேண்டுமென வலியுறுத்துகிறார். ஒரு மனிதன் தான் வாழவேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளில் ஈகைத்திறனுடன் வாழ்வை நடத்தினால் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வெற்றியடைய வழிவகை நேரிடும் என்பதே வள்ளுவனின் கருத்து. பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகில் இன்பம் இல்லாததைப் போல அருள் இல்லையெனில் இறைவனை அடைய முடியாது என்பதை எடுத்துரைக்கிறார். தன் உயிர் அஞ்சுவதற்குக் காரணமாகிய தீவினைகள் தோன்றா என்பது வள்ளுவர் வாழ்வியல் அணுகுமுறை. இதனை,

*"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப*
*தன்னுயிர் அஞ்சும் வினை" (குறள். 244)*

என்ற குறளில் அடுத்தவர் துன்பத்தை எண்ணுபவருக்கு ஒரு போதும் துன்பம் இல்லை என்ற பொருளில் வாழ்க்கை நெறியினை அறிவுறுத்துகிறார். நாட்டு மக்கள் எக்கவலையும் இன்றி வாழ்வதே நல்ல நாட்டிற்கு இலக்கணம். நல்லவழி என்பது எவ்வுயிரையும் கொல்லாது அறத்தைப் போற்றும் வழியாகும். தன் உயிர் நீங்கிப் போவதாக இருந்தாலும் தான் வேறு உயிரைப் போக்கும் செயலைச் செய்யக் கூடாது என்பது வள்ளுவரின் இலக்கணம்.

*"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது*
*இன்னுயிர் நீக்கும் வினை" (குறள். 244)*

என்ற குறளின் மூலம் பிற உயிரை காக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். தூய அன்புமனம், இனிய சொற்கள், தூய நலமிக்க உடல் இவற்றைக் கொண்டு ஒரு மனிதன் வாழ வேண்டுமெனில் நெஞ்சில் தூய்மையும் அன்பும் இருந்தால், ஒன்றுக்கு நூறாகப் புண்ணியப் பயன்கள் வந்து சேரும். செய்வினை தூய்மையாக இருக்க வேண்டுமானால் மனம் தூயதாக இருக்க வேண்டும் (455) என்று கூறுவது எண்ணத்தக்கது. இன்றைய உலகில் நேர்மையான வாழ்வினைக் காண்பது கடினமாக உள்ளது. தொழிலில் தூய்மை தேவை சிறந்த வாழ்க்கை இதுவே முக்கியத்துவம் பெறுகிறது. இனியவை கூறல், பயனில் சொல்லாமை என்று இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இனிய சொற்களை கூறவேண்டும் என்பதை,

*"அல்லவைதேய அறம்பெருகும் நல்லவை*
*நாடி இனிய சொலின்" (குறள். 96)*

என்ற குறளில் இனிய சொல்லால் ஒரு மனிதனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும் என்பது புலனாகிறது.

மானுட உடம்பின் வாசல்வாய் "வள்ளல்பிரானுக்கு வாய் கோபுரவாசல்" என்பது திருமந்திரம். திருக்குறளில் பல இடங்களில் வாய், நா, பற்றிய குறிப்புகள் உள்ளன. "யாகாவராயினும் நா

காக்க" (127) என்ற குறளில் தீய சொற்களைப் பேசாமல் நாக்கைக் கட்டுப்படுத்திக் காக்க வேண்டும் என்பது பொருளாகும். நாக்கு பேசவும், சுவைக்கவும் என இரு பணிகளை செய்வது இறைவன் படைப்பில் இது அற்புதமானது. தீயன பயனில்லாதன கூறி உடலிலும் உள்ளத்திலும் துன்பத்திற்கு ஆளாகமல் வாழும் நெறியினை எடுத்துரைப்பது புலனாகிறது.

